தமிழர் பொருணமியம்

வாரமலர்

TAMILS ECONOMY



விலை - 100/=

இதழ் - 88

15.12.2024

# நவீன விவசாயமும் உணவுப் புரட்சியும்


பதிவு செய்யாமல் தாமதப்படுத்தும் வாகனவர்த்தகர்களுக்கு அபராதம் ! 10

இயற்கை உணவு பொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்ய உதவும் HcOrganic.com தளத்தை தொடங்கிய க.சோமசுந்தரம் 13

பங்குச் சந்தை என்பது 18

வேகமாக பரவும் எலிக்காய்ச்சல் 20


பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# சங்க இலக்கியங்களில் சிறுதானியங்கள்

மக்களின் வாழ்வாதரமாக அமைவதும் முதன்மை பெறுவதும் உணவாகும். உணவு வகைகளுள் தானியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இதில் மிகவும் சக்தி வாய்ந்தவையாக இருப்பது சிறுதானியங்கள் ஆகும். சிறுதானிய வகைகளில் மிகவும் பழமை வாய்ந்தவையாக கேழ்வரகு, சாமை, தினை, கம்பு, சோளம். வரகு குதிரைவாலி போன்றவை அடங்கியுள்ளன. சிறுதானியங்களை சங்ககால மக்கள் மிகுதியாக பயன்படுத்தியுள்ளன. அவர்களைப் போல் இன்றையக் காலக்கட்ட மக்களும் மிகுதியாக பயன்படுத்தி வருகின்றன, சிறுதானியங்கள் சங்ககால மக்கள் பயன்படுத்திய உணவு வகைகளில் பெரும்பங்கு வகித்துள்ளன என்பதை சங்க இலக்கியப் பாடல்கள் எடுத்துரைத்துள்ளதை காணமுடிகின்றது. அது மட்டுமின்றி நீதி இலக்கியமான திருக்குறளில் பல்வேறு குறட்பாக்களில் 'தினை' என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளதையும் பார்க்கமுடிகிறது. எனவே. சங்ககாலம் முதல் சிறுதானியங்களை மக்கள் பயன்படுத்தினர் என்பதையும் அறியமுடிகிறது.

**சங்க இலக்கியங்களில் சிறுதானியங்கள்**

சங்ககால மக்கள் சிறுதானியங்களைச் சோறாக அவித்தும், தின்பண்டமாகவும், மாவாக இடித்து இனிப்பு சேர்த்தும் உண்டுள்ளனர். தினையரிசிச் சோற்றை நெய்யில் பொரித்த இறைச்சியுடன் சேர்த்து உணவாக உண்டனர் என்பதை,

பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேலையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்
(மலைபடு. 168-169)

என மலைபடுகடாம் பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

ஆடு, மாடுகளை மேய்த்தல் தொழில் புரியும் ஆயர்குலப் பெண்கள் மோர், நெய் ஆகியவற்றை விற்று, பின் கடும்பசியுடன் தன் வீட்டை அடைவாள். அவள் தினையால் ஆக்கிய சோற்றைப் பாலுடன் சேர்த்து உண்பாள் என்பதை பெரும்பாணாற்றுப்படை (பெரும்பாண்.100-103) உணர்த்துகின்றது.

தினைக்கதிர், எள், வரகு ஆகிய உணவுப்பொருட்கள் நிறைந்து காணப்பட்டதை மதுரைக்காஞ்சி (மதுரை.292-293) குறிப்பிடுகின்றது.

முள்வேலியுடைய தோட்டத்தில் ஆடு தின்று மீதமுள்ள முன்னைக்கீரை இலையைப் பறித்து சாறாக்கி வரகுச் சோற்றுடன் உண்டனர் என்பதினை,

இடுமுள் படப்பை மறி மேய்ந்து ஒழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங் கண் குற்றடகு
புன்புலவரகின் சொன்றியொடு, பெறூஉம்
(புறம். 197:10-12)

என புறப்பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது.

சிறுதானிய வகைகளுள் வரகு முக்கிய பங்கு வகிக்கிறது. இங்கு வரகு அரைப்புறுகிறது. அ..தாவது வரகு குற்றப்படுகிறது. இதனால் கிடைப்பது வரகரிசி. கதிரிலிருந்து பெறப்பட்ட வரகினைக் குற்றி அரிசியாக்குகின்றார்கள்.

அதுவே வரகின் பச்சரிசி. இதை சோறாக்கினால் இது விரைவாக குழைந்துபோகும். இதனால் இவற்றை தயிருடன் சோத்து உண்டிருக்கின்றனர்.

இதை,
கவைக்கதிர் வரகின் அவைப்புறு ஆக்கல்
தாதுஎ மறுகின் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீடு,
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை
(புறம். 215:1-4)

புறப்பாடல்வரிகள் மூலம் அறியமுடிகிறது.

பண்டைய உணவுப் பண்பாட்டில் வரகரிசிச் சோறு முதன்மையாக இடம்பெற்றிருந்ததை ஔவையின் தனிப்பாடல் திரட்டில் (32-வது வெண்பா) குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் புல்வேலூரைச் சேர்ந்த பூதன் என்பவன் ஔவைக்கு வரகரிசி உணவளித்த செய்தியைக் காணலாம். அவன் அளித்த விருந்து இவ்வுலகையே பரிசாக வழங்கியதற்கு ஒப்பானதாம். அப்படியென்றால் அந்தளவுக்கு ஔவைப் பிராட்டிக்கு அவ்வுணவு சுவையானதாக இருந்திருக்கும் என்பதை அறியமுடிகிறது.

மேலும், கரிய அடிப்பகுதியையுடைய வரகுப் பயிர், பெரிய கதிர்களையுடைய தினை, சிறிய கொடியாக வளரும் கொள், அவரை போன்றவை இவ்வூரின் முக்கிய உணவாக மாங்குடி கிழார் புறநானூறு பாடலில் (335) குறிப்பிட்டுள்ளார்.

பாரியின் நாடு கதிர்கள் வளைந்து ஒடியாமல் வரகானது மிகக் காய்ந்து விளைந்தது. அந்த வரகை அறுக்கவும், தினையை அரியவும், கொடி அவரையையும் அறுக்கவும் அந்நாடு ஆரவாரம் உடையதாயிருந்தது என்பதை,

கீழும் மேலும் எஞ்சாமைப் பல காய்த்து
வாலிதின் விளைந்த புது வரகு அரிய
தினை கொய்ய, கல்வை கறுப்ப, அவரைக்
கொழுங்கொடி விளர்க் காய் கோட் பதம்
(புறம். 120:8-11)

என பாரிநாட்டின் வளத்தை புகழ்ந்து கபிலர் சிறப்பித்துள்ளார்.

ஒருவர் தினையளவு நன்மையை ஒருவர் செய்தால்கூட அதை பனையளவு கருதவேண்டும் என்று திணையை ஒப்பிட்டு உவமையாக,

தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன்தெரி வார் (திருக். 104)

என்று பொய்யில் புலவர் திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார்.

நன்னனது மலைநாட்டு நிலத்தார் அவரை விதைகளையும் மூங்கில் அரிசியையும், நெல்லின் அரிசியையும் கலந்து புளி கரைக்கப்பட்ட உரையிற்பெய்து புளியற்கூழாகக் குழைத்து உட்கொண்டனர் என்பது சங்க இலக்கிய பாடல்கள் விளக்கியுள்ளது.

தொண்டை நாட்டில் முல்லைநில மக்கள் பால் கலந்த தினையரிசி சோறும், வரகரிசி சோற்றுடன் அவரைப் பருப்பு கலந்து செய்து 'கும்மாயம்' என்ற உணவையும் உண்டனர். மேலும், முல்லை நிலத்தைச் சார்ந்திருக்கும் புன்செய் நிலங்களையுடைய சிறிய ஊர்களில் நெல் விளைவதில்லை. அந்நிலங்களில் விளைந்த வரகும் தினையுமாகிய உணவுப் பொருட்களை பொருள் இல்லாதவர்களுக்கு தானமாக வழங்கினர் என்பதினை,

உடை முதல் புறவு சேர்ந்திருந்த
புன்புலச் சீறூர், நெல் விளையாதே;
(ஐங். 285:2-3)

மேலும்,
வரகும், தினையும் உள்ளவை எல்லாம்
இரவலம் மாக்களுக்கு ஈயத் தொலைந்தன
(ஐங் 261:1-2)

என ஐங்குநுறூறு பாடல் வரிகள் அறியலாகிறது.

கானவாக்கு அஞ்சாத கொடிய பற்களை உடைய பன்றிகள் மென்மையான தினையை

மேய்ந்தது. அத்தகைய வலிய கற்கள் பொருந்திய மலைநாடவன் என்பதை,

சிறுதினை கொய்த இருவி வெண்கால்
காய்ந்த அவரைப் படு கிளி கடியும்
யாணர் ஆகிய நல்மலை நாடன் (ஐங் 286:1-3)

என ஐங்குநுறூறு பாடல் வரிகள் செப்புகின்றன.

இவ்வாறு பழங்காலம் முதல் இக்காலம் வரை சிறுதானியங்கள் உணவில் முக்கிய பங்கு பெற்று வருகிறது என்பதை அறியமுடிகிறது.

## சிறுதானியங்கள்

### வரகு

சிறுதானிய வகைகளுள் முக்கியமானது வரகு. இது கோதுமையை விட சிறந்தது. வரகில் இருக்கும் நார்ச்சத்து அரிசி, கோதுமையில்இருப்பதைவிடசற்றுஅதிகமாக காணப்படுகிறது. வரகில் மாவுச்சத்தும் குறைந்த அளவில் காணப்படுவதால் இது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாக காணப்படுகிறது. இதில் அதிக அளவு புரதச்சத்துக்களும், தாது உப்புக்களையும் கொண்டதாக இருக்கிறது.

மாதவிடாய் கோளாறு உடைய பெண்கள் வரகு சமைத்து உண்பதால் கோளாறுகள் நீங்குகிறது. வரகு சர்க்கரை அளவை குறைக்கிறது. மேலும்,மூட்டு வலியைக் குறைக்கிறது. இதில் புரதம், இரும்புச்சத்து மற்றும் சுண்ணாம்புச்சத்து அதிக அளவில் காணப்படுகிறது.

### சாமை

சாமை நெல்லரிசியைக் காட்டிலும் ஏழு மடங்கு நார்ச்சத்து அதிகம் கொண்டுள்ளது. சர்க்கரைநோயைகட்டுப்பாட்டில்கொண்டுவர முக்கிய பங்கு வகிப்பது நார்ச்சத்து. சாமையில் இரும்புச்சத்து அளவிட்டால் மற்ற சிறுதானியங்களைக் காட்டிலும் அதிகம். இவை இரத்தசோகை வருவதை தடுக்கிறது. வயிறு கோளாறுக்கு சாமை நல்ல ஒரு மருந்தாக திகழ்கிறது. மேலும் இவை தாதுப்பொருட்களை உடலில் அதிகரித்து உயிரணுக்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில் சாமை பெரும்பங்கு வகிக்கிறது.

### கம்பு

இந்தியாவில் விளையும் தானிய வகைகளில் கம்பும் ஒன்றாகும். நம் முன்னோர்கள் காலையில் கம்பை கஞ்சியாக்கிகுடித்தனர்.சிலர்அரிசியைப்போல வேகவைத்து வடித்து தின்றனர். கம்பு உடல் சூட்டைத் தணிக்கக்கூடியது. மேலும், இவை செரிமானக்கோளாறுகள் நீக்கி நன்கு பசி எடுக்கவைக்கும். வயிற்றுப்புண், வாய்ப்புண்ணை கம்பு குணப்படுத்தும். கம்பு தானியத்தில் அதிக அளவில் புரதம், கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, ரைபோபுளோவின், நயாசின் சத்துக்கள், வைட்டமின்கள்,தாது உப்புக்கள், மாவுச்சத்து, பி11 வைட்டமின், கரோட்டின், லைசின் போன்ற அமிலங்கள் உள்ளதால் உணவுச் சத்துத் தரத்தில் கம்பு முதலிடம் வகிக்கிறது. அரிசியை விட எட்டு மடங்கு அதிக இரும்பு சத்து கம்பு தானியத்தில் உள்ளது.

### சோளம்

சோளத்தில் ஆற்றல், புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, கால்சியம், இரும்புச்சத்து, பி-கரோட்டின், 47 மி.கி. தயமின், ரிபோப்ளோவின், நயசின் ஆகிய சத்துக்கள் உள்ளன.

### குதிரை வாலி

குதிரைவாலியில் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் தன்மை உண்டு. நார்ச்சத்து, மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளது. ஆண்டி ஆக்சிடன்ட் ஆக வேலை செய்கிறது. கோதுமையை விட ஆறு மடங்கு நார்ச்சத்து உள்ளது.

### தினை

பழங்காலத்தில்முதலாவதாகபயிரிடப்பட்டு மனிதனால்உபயோகிக்கப்பட்டதானியவகை தினை. அதுவும் கி.மு.6000-ல் சீனாவில் பயிரிடப்பட்டுஉபயோகிக்கப்பட்டுவந்துள்ளது. இது இதயத்தைப் பலப்படுத்தும். பசியை உண்டாக்கும். இதில் புரதச்சத்துக்கள், கொழுப்புச்சத்து, தாது உப்புக்கள், நார்ச்சத்துக்கள், மாவுச்சத்துக்கள் மற்றும் வைட்டமின் பி, பாஸ்பரஸ், சுண்ணாம்புச் சத்து உள்ளது.

### ராகி (எ) கேழ்வரகு

ராகிஅரிகிகோதுமையைக்காட்டிலும்சக்தி நிறைந்ததாகும்.கேழ்வரகில்புரதம்,கொழுப்பு, இரும்புச்சத்து, நார்ச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், தயமின், கார்போஹைட்ரேட் போன்றவை உள்ளன. இது தவிர பி கரோட்டின், நயசின், ரிபோப்ளேவின் போன்ற சிறிய ஊட்டச்சத் துக்களும், அமினோ அமிலங்களும் நிறைந்துள்ளன. ராகி களி உடல் சூட்டை தணிக்கக்கூடியது. ராகி இரத்தத்தைச் சுத்தம் செய்யும்; எலும்பை உறுதிப்படுத்தும்; சதையை வலுவாக்கும்; மலச்சிக்கல் ஒழியும்; அதிக நேரம் பசி தாங்கச் செய்யும்.

## சிறுதானியத்தின் பயன்கள்

சிறுதானியங்கள் உடல்நலத்திற்கு தீங்கு விளைக்கும் கிருமிகளை அளிக்கிறது. இவை உடல் வளர்ச்சியை தூண்டுவதோடு உடலை சுறுசுறுப்பாக வைத்திருக்க தேவையான செராட்டின் உற்பத்திக்கு உதவுகின்றது.பெருங்குடலின்செயல்பாட்டை ஒழுங்குபடுத்துகிறது. சிறுதானியங்களில் அதிக அளவில் மெக்னீசியம் இருப்பதால் ஆஸ்துமா மற்றும் ஒற்றை தலைவலியை தடுக்கிறது. மேலும், இவை இரத்த அழுத்தத்தை சீராக்குவதால் இதய நோயிலிருந்து பாதுகாக்கிறது.

சிறுதானியங்களில் உள்ள நியாசின் (வைட்டமின்3) இரத்தத்தில் அதிக அளவு கொழுப்பு சேர்வதைத் தடுக்கிறது. சிறுதானியங்களை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வதால் சார்க்கரை நோய் வருவதில்லை. மேலும் இரத்தத்தில் உள்ள சக்கரை அளவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவுகின்றது. சிறுதானியம் பயன்படுத்துவதால் பெண்களுக்கு பித்தப்பையில் கற்கள் வருவதை கட்டுப்படுத்துகிறது. மேலும், இவற்றில் அதிக அளவில் நார்ச்சத்துக் காணப்படுவதால் புற்றுநோய் வருவதைத் தடுக்கிறது. உடல் பருமன் உடையவர்கள் உடல் எடையைக் குறைக்கஉதவுகின்றது.எலும்புவளர்ச்சிக்கும் சராசரி உடல் ஆரரோக்கியத்திற்கும் சிறுதானியங்கள்முக்கியபங்குவகிக்கின்றது.

எனவே, தற்கால உணவு முறையில் பயன்படுத்தப்படும் மைதா, பீட்சா, நூடுல்ஸ் போன்றவற்றை தவிர்த்து, பாரம்பரிய உணவுப்பொருட்களானசிறுதானியங்களைப் பயன்படுத்துவதால்உடல்ஆரோக்கியத்துடன் நோயற்ற வாழ்வை வாழமுடியும் என்பதை அறியமுடிகிறது.

## தொகுப்புரை

பண்டையத் தமிழர்கள் மேற்கொண்ட உழவுத்தொழில்,நீர்பாசனமுறைகள்,உணவு பழக்கங்கள் இன்றும் காணப்படுகிறது. ஐவகை நிலத்தில் வாழ்ந்த மக்கள் சத்துக்கள் நிறைந்த உணவுகளை உண்டு வாழ்ந்துள்ளனர். இவர்கள் பெரும்பாலும் உணவில் இறைச்சியையே பயன்படுத்தியுள்ளனர். ஐவகைநில மக்களின் காட்டுமிராண்டித்தனங்கள் மாறி உணவு வாயிலாகச் சமுதாய உணர்ச்சி வளர ஆரம்பித்த காலம் பல வகையான உணவுப்பொருட்கள் உண்டாக்கி உண்ணும் முறைகள் மாறமாற உணவுடன் சுவையும் நாகரிகமும்வளரத்தொடங்கின.பயிர்தொழில் ஆரம்பித்து வேளாண்துறையில் மிக்க தேர்ச்சி பெற்றனர். நாம் இன்று உண்ணும் உணவுப்பொருட்கள் தோன்றுதலுக்கும் வளர்ச்சிக்கும்வித்திட்டவர்கள்ஐந்நிலமக்களே என்பதில் ஐயமில்லை.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

# எலிக்காய்ச்சல் எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் எலிக் காய்ச்சல் தற்போது பரவி வருவதன் காரணமாக, விவசாயத்தை வாழ்வாதாரமாகக்கொண்டு வாழும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் தொடர்ந்து ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக, அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த எலிக்காய்ச்சல் அதிகம் பரவி வருவதாக, அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வருட ஆரம்பத்திலிருந்து இதுவரைக்கும் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 40 பேர் உயிரிழந்துள்ளதாக அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயிகள், வடிகால்களை சுத்தம்செய்பவர்கள், சுரங்கங்களில் வேலை செய்பவர்கள், சதுப்பு நிலங்களில் பணியாற்றுபவர்கள், கால்வாய்கள் மற்றும் அசுத்தமான நீரில் நீச்சலடித்து விளையாடுபவர்கள் போன்ற அனைவரும், அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரியிடம் மாத்திரையை வாங்கி உட்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


அவரவரது பணிகளுக்குச் செல்லும் முன்னர் இரு மாத்திரைகளையும் வேலையின் போது சிறிதளவு நீரை அருந்துவதன் மூலமும் இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத்திரை, குறித்த நோய் பரவுவதை 90 சதவீதத்தில் பாதுகாக்கும் என்றும் தினமும் இந்த முறைமை பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திடீரென ஏற்படும் அதிக காய்ச்சல் அல்லது லேசான காய்ச்சல், உடல் குளிர்தல், கண் வெண்மையாதல், இடுப்பு மற்றும் சில பகுதிகளின் தசை மென்மையாதல், கடுமையான தலைவலி மற்றும் சிறுநீர் வெளியேறுவது குறைவாக இருத்தல் போன்ற அறிகுறிகளின் மூலம் எலிக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளமையை அறிந்துகொள்ள முடியும்.

இந்தக் காய்ச்சல் கடைசிக்கட்டத்துக்குச் சென்றால், இருதயம் செயற்படாமை மற்றும் பல்வேறு உடற்சிக்கல்கள் ஏற்படும் என்பதால் நோயாளியை காப்பாற்றுவது கடினமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பல்வேறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இருக்கும் நமது சமூகத்தில் இத்தகைய இடர்பாடுகளை தவிர்ப்பதற்கு நாங்கள் முன்னெச்சரிக்கையுடன் நடக்க வேண்டியது மிகவும் அவசியம்.

# உங்களின் போட்டியாளர்களை சமாளிப்பது எப்படி?




அனைத்து துறைகளிலும் போட்டியாளர்கள் (competitor) இருக்கத்தான் செய்கிறார்கள். போட்டியாளர்கள் இருப்பதினால்தான் சந்தையில் (market) சிறந்த தரமான பொருள்கள் கிடைக்கிறது. சிறந்த சேவை அளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறார்கள்.

சந்தையில் தொடர்ந்து முன்னிலையில் இருக்க தினம் தினம் புதிய விலை மலிவான பொருள்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. எனவே போட்டி என்பது தேவையான ஒன்றுதான்.

**போட்டியை சமாளிக்க பின்வருவனவற்றை முயற்சி செய்து பாருங்கள் :**

1. போட்டியை சமாளிக்க முதலில் உங்களின் பலம் (strength) மற்றும் பலவீனங்களை (weakness) ஆராய வேண்டும். அடுத்து உங்கள் போட்டியாளரின் பலம் மற்றும் பலவீனங்களை ஆராயவேண்டும்.

2. உங்கள் பொருளின் தரம் (quality) மிகவும் சிறந்ததாக இருக்க வேண்டும்.

3. புதிய தொழில்நுட்பங்களால் (technology) உங்கள் பொருள் மெருகேற்ற வேண்டும். அந்த புதிய தொழில்நுட்பங்களை உங்கள் வாடிக்கையாளர் அறியும் வகையில் செய்யவேண்டும்.

4. உங்கள் வாடிக்கையாளர் சேவை (customer service) ஒரு எடுத்துக்காட்டாக அனைவருக்கும் விளங்க வேண்டும்.

5. வாடிக்கையாளரிடம் இருந்து வரும் குறைகளுக்கு உடனடியாக தீர்வுகாணவேண்டும்.

6. போட்டியாளர்கள் நம் பொருட்களை போல் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் போது அவர்களை விட சிறந்த பொருளை குறைவான விலைக்கு விற்க வேண்டும்.

7. தொடர்ந்து நமது பொருட்களின் தரம் மற்றும் சேவையை மேம்படுத்திய வண்ணம் இருக்கவேண்டும்.

8. நம் பொருட்களுக்கு ஏதேனும் மாற்றுப் பொருட்கள் சந்தையில் அறிமுகம் ஆகிறதா என்று கண்காணிக்கவேண்டும்.

9. நீங்கள் எப்போதும் உங்கள் போட்டியாளர்களை விட மூன்று படிகள் முன்னே இருக்கவேண்டும்.

10. உங்கள் பொருளை வாடிக்கையாளர் வாங்க காரணங்கள் என்ன? அதே போல் உங்கள் போட்டியாளர் பொருளை ஏன் வாங்குகிறார்கள்? என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

11. உங்களை பற்றி வாடிக்கையாளர்கள் என்ன நினைக்கிறார்கள்? உங்கள் போட்டியாளர்களை பற்றி என்ன நினைக்கிறார்கள்? என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

12. நீங்கள் போட்டிபோடும் சந்தையில் வருங்காலத்தில் என்னென்ன மாற்றங்கள் வரும் என்று எதிர்பாரக்கீறிர்கள்?

இவ்வாறு உங்கள் தொழிலை பாதிக்ககூடிய அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கவேண்டும்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,04,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,23,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** வசம்பு பயிர்செய்கை பற்றி விளக்கமுடியுமா?

**பதில் -** இயற்கை மருத்துவத்தில் வசம்பு பல விதங்களில் பயன்படுகிறது என்பதனை அனைவரும் நன்கு அறிவோம்.

வசம்பு ஒரு ஏக்கரில் பயிர் செய்தால் ஆண்டு வருமானம்.

25 - 30 லட்சம் வரை கிடைக்கும்.

ஆச்சரியமாக உள்ளதா.?

இது அதிகமானோருக்கு நிச்சயம் தெரியாது ஆனால் இதுதான் உண்மை

வசம்பு, இஞ்சி தாவரவியல் குடும்பத்தைச் சார்ந்தது. இவைகள் 60 முதல் 90 செ.மீ. உயரம் வரை வளரக்கூடிய பயிர்வகையாகும். வசம்பு வேர்கள் சரியாக 50 முதல் 60 கிராம் எடையுள்ளவை.

வேர்கள் மஞ்சள் கிழங்கினைப் போன்று நெருக்கமான கணுக்களை உடையது. வேர்கள் ஒரு மீட்டர் வரை அகலமாகப் படரும். பக்க வேர்கள் வேகமாக வளரும்தன்மை உடையவை.

களிமண் மற்றும் நீர்பிடிப்புள்ள மண் வகைகள் பயிரிடுவதற்கு மிகவும் ஏற்றவை. ஆற்றுப் படுகையில் நீரோட்டம் உள்ள ஓரங்களில் இதனை பயிர் செய்யலாம். நெற்பயிர்செய்கைக்கு உகந்த நிலங்கள். மற்றும் சதுப்பு நிலங்களில் வசம்பு பயிரிடுவதற்கு ஏற்றதாகும். வெப்பமான தட்பவெப்ப நிலையில் நன்றாக வளரும்.

ஆனால்ஆண்டுமுழுவதும்சீரானமழையளவு இருப்பது அவசியம். செடிகளின் துரித வளர்ச்சிக்கு அதிக அளவு சூரிய ஒளி இருப்பது நல்லது.

1ஏக்கருக்கு 600 கிலோ கிழங்கு தேவைப்படும். நீர்க்கசிவு உள்ள இடங்களைத் தேர்வு செய்து ஒரு ஏக்கருக்கு 10 டன் தொழு உரமிட்டு மண்ணில் தண்ணீர் தேங்கும் வண்ணம் சேற்று உழவு செய்து பண்படுத்த வேண்டும்.

விதைக்கிழங்குகளை 30 செ.மீ இடைவெளியில் நேர்கோடுகளில் நாட்ட வேண்டும்.

வரிசையில் விதைக்கப் பட்ட கிழங்குகள் அடுத்த வரிசையில் விதைத்த கிழங்குகளுக்கு நேராக இல்லாமல் இரண்டு கிழங்குகளுக்கு மையமாக விதைக்க வேண்டும். இதனால் வேர்களின் வளர்ச்சி நன்றாக இருக்கும்.

மண்ணில் எப்போதும் ஈரத்தன்மை இருக்குமாறு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். விதைத்த முதல் இரண்டு மாதங்களுக்கு 5 செ.மீ. உயரம் தண்ணீர் நிறுத்தப்பட வேண்டும். பிறகு 10 செ.மீ. உயரத்திற்கு தண்ணீர் நிறுத்த வேண்டும்.

விதைத்த ஒரு மாதத்திலும் பிறகு இரண்டு மாதங்கள் இடைவெளியிலும் 2 அல்லது 3 முறை களை எடுக்க வேண்டும். ஒவ்வொரு முறை களை எடுக்கும் போதும் வரும் வசம்பு வேர்களை காலால் மிதித்து ஆழமாக மண்ணில் அழுத்திவிட வேண்டும். இதனால் கிழங்குகளின் வளர்ச்சியினை துரிதமடையச் செய்யலாம்.

வசம்பை பொருத்தவரை இலைகள் பழுப்பு நிறமாகி நுனி கருக ஆரம்பித்தால் அறுவடைக்குத் தயாராகி விட்டது என்று அர்த்தம்.

கிழங்கு தரமான தலையை அடைய 8 மாதங்கள் ஆகும்.

அறுவடை செய்வதற்கு முன் வயலில் உள்ள நீரை வடித்து மண்ணை சிறிதளவு காயப்போட வேண்டும்

பிறகு இலைகள் பழுப்பு நிறமாக மாறிக் காய்ந்துவிடும்.

மண்ணைத் தோண்டி கிழங்கு மற்றும் வேர்களை அறுவடை செய்யலாம். இந்த சமயத்தில் கிழங்குகளை கவனமாகத் தோண்டி எடுத்த 5 முதல் 7 செ.மீ. நீளத்தில் வெட்ட வேண்டும்.

பக்க வேர்கள் அனைத்தையும் நீக்கிவிட வேண்டும். தண்ணீரில் கிழங்குகளைக் கழுவி வெயிலில் உலர்த்த வேண்டும். உலர்த்தப்பட்ட கிழங்குகளின் மேல் உள்ள செதில் பகுதியை நீக்குவதற்காக சாக்குப்பையில் போட்டு நன்றாகத் தேய்க்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு சராசரியாக 5 தொடக்கம் 7 டன் உலர்ந்த கிழங்குகள் கிடைக்கும்.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94(77)2034807**
**+94 (77) 776 9751**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 340/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 380/= |
| மரவள்ளிக்கிழங்கு | 300/= |
| கோவா | 280/= |
| கரட் | 290/= |
| வாழைக்காய் | 260/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 360/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 220/= |
| முருங்கைக்காய் | 400/= |
| தேங்காய் | 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரேர்லிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

காலமை நான் பேப்பர் பாத்துக் கொண்டுஇருக்கேக்கைவந்தவீட்டம்மா படலையுக்கை ஆற்றையோ நாய் ஒண்டு வந்து மூத்திரம் பெஞ்சுபோட்டுப் போயிருக்குது ஒரே நாத்தமாக் கிடக்கு உதுகளைப் பாக்க மாட்டியளே . எப்ப பாத்தாலும் ஒண்டில போனை நோண்டுங்கோ இல்லாடில் பெட்டிசன் பேரம்பலம் மாதிரி உந்தப் பேப்பர்களை மேலை இருந்து கீழை இல்லாட்டில் கீழை இருந்து மேலை வாசியுங்கோ . எல்லாம் என்ரை தலை விதி இப்படி உபத்திரவப்படச்சொல்லிஎழுதிக்கிடக்கு எண்டு பாக்கியலச்சுமியைப் பாக்க டீவீயைப் போட்டா .உந்த மூத்திரம் எண்ட சொல்லை நாங்கள் வீட்டிலை இப்பவும்பாவிக்கிறனாங்கள். எங்கடை அம்மா தம்பி கொஞ்சம் பொறு நான் ஒருக்கா மூத்திரம் பெஞ்சு போட்டு வாறன் எண்டுவா .எங்கட ஊராக்கள் ஏன் கனக்கப் போவான் மற்றஊர்வழியையும் குறிப்பா கிராமங்களிலை உந்தச்சொல்லை வலு தாராளமாப் பாவிக்கிறவை . எங்கடை அப்பு ஆச்சி எல்லாம் பாவிச்சவை .

உதுமாதிரி குண்டி , கோவணம் , குசு . பீ.புக்கை எண்ட சொல்லுகளை எல்லாம் நாங்கள பாவிச்சனாங்கள் இப்பவும் வீடுகளிலை பாவிக்கிறம் . ஆனால் இந்த எங்கட அப்பு ஆச்சி பாவிச்ச உந்தச் சொல்லுகளை எல்லாம் பாவிக்கிறது ஏதோ அசூசை எண்ட மாதிரி ஒரு கருத்து சிலரிடம் இருக்கிறது . மூத்திரம் எண்ட சொல்லைஎடுத்தம்எண்டால்சிலர்அது வடமொழி எண்டுகினம் சிலர் இல்லை அது தமிழ் எண்டுகினம் . இப்ப பிரச்சினை அது இல்லை உந்தச் சொல்லைப் பாவிக்கலாமா இல்லை எண்டதுதான் கேள்வி . உந்த மூத்திரம் எண்ட சொல்லை எங்களின்ரைபழையவாகடங்களிலை நல்ல தாராளமாப் பாக்கலாம் . சமய இலக்கியங்களிலை எல்லாம் பாவிச்சு இருக்கினம் . உதரணத்துக்கு ரெண்டு பாட்டுகளை இஞ்சை தரலாம் எண்டு நினைக்கிறன்.

‘தோலி ரத்தம் இறைச்சி மேதை
யெலும்பு மச்சை சுவேதநீ
ராலெ டுத்த முடைக்கு ரம்பை
அழுக்கி னோடு புழுக்குழாம்
நூலொ ழுக்கிடு கோழை ஈரல்
நுரைக்கு மூத்திர பாத்திரம்
சேலடர்த்தகண் ணார்க ளென்பது
தேர்ம லத்திரள் திண்ணமே’

(அருணந்தி சிவாச்சாரியார் –சிவஞான சித்தியார்)

‘ஊத்தைக் குழியில் அமுதம்
பாய்வதுபோல்மீஉங்கள்
மூத்திரப் பிள்ளையை
என்முகில்வண்ணன் பேரிட்டுமீ
கோத்துக்குழைத்துக்குணாலமாடித்
திரிமினோமீ
நாத்தகு நாரணன் தம்அன்னை
நரகம்புகாள்’

(பெரியாழ்வார் –நாலாயிரத் திவ்விய பிரபந்தம்)

மூத்திரசுத்தி எண்ட சொல்லைச் சைவநூல்களில பாக்கலாம் . தமிழ் அகராதியினை எடுத்தால் மூத்திரக்கிருச்சம், மூத்திரக்குடுக்கை, மூத்திர ரோகம் , மூத்திரக்காய் ,மூத்திரக்குளவி, மூத்திரசங்கம், மூத்திரபுடம், மூத்திரமார்க்கம், மூத்திரவிசர்ச்சனி, . மூத்திராசயம்,மூத்திரப்பை எண்டு கன சொல்லுகளைக் காணலாம் . கனபேருக்கு தெரியுமோ தெரியாது சித்திரக்கவி எழுதும் முறைகளிலை கோமூத்திரி எண்டொரு வடிவம் இருக்குது . ரோட்டில பசுமாடு ஒண்டு போகேக்கை அது மூத்திரம் பெய்யேக்கை நிலத்தில ஒரு வளைவா விழுந்திருக்கும் . அதாவது மேல் மேடு கீழ்ப்பள்ளம் மாதிரி இருக்கும் . உப்பிடி ரெண்டு மாடு போனால் ரெண்டு எதிர் வளைவுகள் வரும் . இந்த அமைப்பை சித்திரக்கவி செய்யுள் அமைப்பிலை பாவிக்கிறதைகோமூத்திரிஎண்டுவினம் (கோ =பசுமாடு ; மூத்ரி = மூத்திரம்) . அதாவது செய்யுள் இலக்கணத்தில் மூத்திரம் பயன்படுகிறது .

‘அதாவது ஒரு செய்யுளின் முதலடியில் உள்ள எழுத்துகளும், இரண்டாம் அடியில் உள்ள எழுத்துகளும் ஒன்று இடையிட்டு ஒன்று நேர் எதிர் இணைப்பினவாக அமையும்முறைகோமூத்திரி என்னும் சித்திர கவியாகும்’.அதுமாதிரித்தான் இஞ்சை கொழும்பில இருக்கிறவை புக்கைஎண்டுசொல்லவெக்கப்படுகினம் . சாய்..சாய்..அதென்னண்டு புக்கை எண்டு சொல்லுறது அவங்கள் சிங்கள ஆக்கள் சிரிப்பினம் எல்லே எண்டுகினம் . உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமே அவை சிங்கள ஆக்கள் புதுமை செய்யிறம் புரட்சி செய்யிறம்எண்டுதங்கடைபாரம்பரியம் பழக்கவழக்கங்கள் பண்பாடுகளை மொழிவழக்குகளை எல்லாம் லேசில சமரசம் செய்ய மாட்டாங்கள் . இண்டைக்கும்சிங்களப்பகுதியளிலை போனால் அவங்கள் மூத்திர கிரீம தகனம் எண்டு சுவர்வழியை எழுதி வைச்சு இருக்கிறதைக் பாக்கலாம் .

இப்பிடி மூத்திரம் எண்ட சொல்லைப் பாவிக்கக் கூடாது எண்டு நாண்டு கொண்டு நிண்டா தமிழ் அகராதி, நாலாயிரத் திவ்வியபிரபந்தம் , சிவஞானசித்தியார்,வாகடங்களிலை, செய்யுள் இலக்கணத்திலை எல்லாம் இருந்து உந்தச் சொல்லுகளை எல்லாம் நீக்க வேணும் எண்டும் பேந்து சொல்லிக்கொண்டு வருவினம் . எனக்கெண்டா உப்பிடிப் போனாக் கடைசியல நாகரிகம் எண்டு சொல்லி இடியப்பத்தைமுள்ளுக்கரண்டியாலை சாப்பிட வெளிக்கிட்ட எங்கட சில ஆக்களின்ரை நிலைமைதான் வரும். சமரசம், விட்டுக்கொடுப்பு, முற்போக்கு, பொதுவெளிநாகரிகம்எண்டுநாங்கள் எல்லாத்தையும் விட்டுக்குடுக்கேலாது கண்டியளோ .....

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.

2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.

3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.

4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.

5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.

3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.

4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94(77)2034807 | +94 (77) 776 9751**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**முத்தையன்கட்டு கிராமத்தை ஒருதரமல்ல எத்தனைதரம் வலம் வந்தாலும்.நாம்சுற்றிவரும்ஒவ்வொரு தெருவும்வாய்கால்க்கரையைகொண்டு அமைந்திருப்பது ஆச்சரியமாக இருக்கும். கிராமமே புதிய காற்றும் குளிர்மைபொருந்தியதாகவும்செய்வது இந்தவாய்க்கால்கரைக்காற்றுத்தான் என்றால் மிகையாகாது.**

# எங்கட வாழ்வியல்

## பார்வை 18



தமிழ்க்கவி

மக்கள் பிழக்கத்திலிருக்கு பெரிய நீர்ப்பாசனக்குளங்களை அண்டியதாக அல்லது அதற்கு நீர் வழங்கியாக பல சிறு குளங்கள் அமைவதுண்டு. இவை தாவாடிக்குளங்கள் எனப்படும். இப்படி அமைந்திருந்தபலபாரம்பரியகுளங்கள் இன்று அழிவடைந்து போயுள்ளன.

மேற்பற்று ஊடாக வடக்கு தெற்காக எட்டுமைல் நீளமான குளக்கட்டுகளின்தடயங்கள்உள்ளன. இவை ஒட்டுசுட்டானுக்கு வடக்கே வாவெட்டிக்குளத்தில் உருவாகி புதுக்குளம் சாளம்பன்குளம், தட்டாமலைக்குளம் என வளர்ந்து மண்மலைக்குளம்வரைதொடர்கின்றன. மண்மலைக்குளத்தின் அணைக்கட்டு பேராற்றை மறித்து கட்டப்பட்டதாகும். அது நூறுயார் அகலமான உடைப்பை கொண்டுஅதன்வழிநீரோடியது. இதற்கு இரண்டுமைல்கீழேநீர்த்தேக்கம்ஒன்று காணப்பட்டது. அது அடுக்குக்கல்லு என அழைக்கப்பட்டது

. இதன் அணை நூற்றைம்பது யார் அகலமானது. இதன் ஒருபகுதி இயற்கையாகவும் மிகுதி செயற்கையாகவும் காணப்பட்டது. ஆயிரத்து எண்ணூற்று பத்துகளின் போதுபிரித்தானியர்களால்செய்யப்பட்ட நீர்ப்பாசனஒழுங்குகளில்இந்தஇடமும் கவனத்தில் கொண்டுவரப்பட்டது. இதற்குஅமைவாகவேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் ஐயாயிரம் ஏக்கர்நிலத்துக்கு பாசனம் கிடைக்கும் என ஆய்வாளர் திரு பார்க்கரால் கருதப்பட்டது. மண்மலைக்குளத்துடன் அடுக்குக்கல்லையும் இணைத்து விடுவதற்கானவேலைமிகசொற்பமான செலவையே கொள்ளும் எனவும் மதிப்பிடப்பட்டது.

இதே குளத்தைப்பற்றியதான பிரித்தானிய ஆட்சிக்கு முற்பட்ட ஒரு கிராமியக்கதை ஐதீகக்கதையாக அப்பகுதி மக்களிடையே உலவுகிறது அவற்றைஆதாரமாகவைத்து‘அருணா செல்லத்துரை’ என்பவரால் எழுதப்பட்ட ‘நந்திஉடையாஜ”; என்னும் வரலாற்று நவீனம் அத்தகைய ஒன்றாகும். அந்த நாவலுக்கான களம் மிக கச்சிதமா அமைந்திருக்கிறது என்ற போதும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வகையிலும் குளக்கோட்டன் என்ற மன்னன்திருகோணமலையில் இருந்து ஆட்சி செய்த காலத்தில் சிற்றரசனான நந்திஉடையாரின் அழகிய மகள்களை திருமணம் செய்ய விரும்பினான். அதற்கு நந்தி உடையார் மறுப்பு தெரிவிக்கவே’ நந்திஉடையாரின் வெள்ளாமைக்கு நீர் பாய்வதைத் தடுக்கவே அவன் பேராற்றை மறித்து இநதக்குளத்தை கட்டினான் என கூறப்படுகிறது. எனினும் முத்தரையன் என்ற சிற்றரசன் பெருமுயற்சியில் இக்குளம் மறித்து அடுக்குக்கல்லுடன் சேர்த்துஅணையிடப்பட்டது. அதன்பின் இது முத்தரைரையன்கட்டு என்று அழைக்கப்பட்டது.

எனினும் இந்த வனத்திலிருந்து காடுகள்அழித்துபுதியகுடியேற்றமானது நிறுவ சிறிமா அம்மையாருடைய காலமே வாய்த்தது. நெல் தவிர, செத்தல்மிளகாய், வெங்காயம், தென்னை பழமரங்கள் என பயிரிடவும் குளத்தின்அமைப்புக்கேற்பவலதுகரை இடதுகரை என பெருவாய்க்கால்களை நிறுவி, நீர்ப்பாசனம்மேற்கொள்ளப்பட்டு நெற்செய்கைக்கும்நிலம்வழங்கப்பட்டது. இனக்கலவரத்தால் மலையகத்தை



விட்டு வெளியேறிய ஏராளமான மக்களுக்குபெரும்வேலைவாய்ப்புகளை பெறக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு கமத்தினதும்காவல்தோட்டவேலைகள் அனைத்தும் இந்த மக்களால் மேற்கொள்ளப்பட்டது.

முத்தையன்கட்டுகுடியேற்றத்திட்டம் முதலில் இரண்டு கட்டடமாக வடிவமைக்கப்பட்டது. இதுவும் வேலையற்ற படித்தவாலிபர்களுக்கான திட்டமே. ஏன்றாபலும் இங்கு நிலம் நெற்செய்கைக்கும் தோட்ச்செய்கைக்குமாக பிரிக்கப்பட்டது கீழ்க்கரை மேற்கரை என் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு விவசாயிக்கு வயல்நிலமும் தோட்டநிலமும் வழங்கப்பட்டது. இதுவும் குடும்ப அங்கத்தவர் தொகை நிலத்தை திருத்துவதற்கான ஆளணி என்பன கணிக்கப்பட்டது. மக்கள் எவ்விதத்திலும் வெளியேறாதபடிதட்டாமலைஜீவன்நகர் என்ற பெயரிலுமமைந்த குளம் கீழ்க்கரையில்பின்னர்குடியேற்றப்பட்டது. முத்தையன்கட்டில் மேற்கரையான வலதுகரை குளக்கட்டை அதாவது வான்கட்டை அண்மித்ததான பெருமளவான நிலப்பரப்பு பின்னாளில் இயக்கப் பண்ணைகளாக இருந்தது. தனிநபர்களுக்காக பங்கிடப்பட்டது

அவை தனியே மரக்கறி செத்தல் மிளகாய் போன்றவற்றின் உற்பத்திக்கு ஆதரவாக இருந்தது. என்னதான் ஒட்டிசுட்டான் அண்மையில் அமைந்திருந்தாலும் முத்தையன் கட்டுக்கென பேருந்து சேவை, பாடசாலை, பொது நோக்கு மண்டபம், கூட்டுறவுக்கடை என அனைத்தும் இருந்தது. கூலித் தொழிலாளர்களாக ஏராளமான மலையகத்தமிழர் வந்தனர். அவர்களை தமது நிலங்களில் காவல் செய்வதற்காகவும், வேலை செய்வதற்காகவும். அந்தப்பண்ணைகளில் ஒருபுறமாக கொட்டில் போட்டு வாழ இந்த காணிக்காரர்கள் அனுமதித்திருந்தனர். இந்த நடவடிக்கையின் தொடர்ச்சி பெருமளவு மலையகத்தமிழரை இங்கு ஈர்த்தது.

முத்தையன்கட்டு கிராமத்தை ஒருதரமல்ல எத்தனைதரம் வலம் வந்தாலும். நாம் சுற்றிவரும் ஒவ்வொரு தெருவும் வாய்கால்க்கரையை கொண்டு அமைந்திருப்பது ஆச்சரியமாக



இருக்கும். கிராமமே புதிய காற்றும் குளிர்மை பொருந்தியதாகவும் செய்வது இந்த வாய்க்கால் கரைக்காற்றுத்தான் என்றால் மிகையாகாது.

நேரடியாக நிலத்தை பெற்ற படித்த வாலிபர்கள் அநேகர் அங்கே தொடர்ந்து தமது குடும்பத்துடன் வசிக்கவில்லை. யாழ்ப்பாணம் முள்ளியவளை போன்ற பழைய இடங்களில் வசித்தவாறே ஆண்கள் வந்து கமத்தை பார்வையிட்டு பலனையும் பெற்றனர்.

அங்கு வன விலங்குகளுடன் போராடி நிலத்தைகாவல் செய்து வர மலையகக் கூலிகளால் முடிந்தது. கிராமமட்டத்திலுள்ள பாடசாலை கமநல சேவை நிலையம் கிராம அதிகாரி என்போர் அங்கு தங்க வேண்டிய சூழல் இருந்தது அதிலும் சிலர் ஓட்டுசுட்டானிலிருந்து அன்றாடம் சென்று வேலை செய்து வந்தனர்.

பெருமளவு மரக்கறி அறுவடையும் வெங்காயம் செத்தல்மிளகாய்ச் செய்கையும் அபரிமிதமான வருவாயைத்தந்தாலும், தென்னை நடுகையிலும் மக்கள் ஆர்வமாக இருந்தனர். குளத்தில் மீன்பிடித்தலானது பெரும் வருவாயை தருவதால் அதன் வருடாந்தக்குத்தகைக்கு பெரும் போட்டி நிலவும். இங்கே பிடிக்கப்படும் அதிக அளவிலானவரால், திலாப்பியா(ப்பான்) போன்ற மீன்கள் அதிக சுவையுள்ளன. மீதமாகும் மீன்கள் கருவாடாக்கப்பட்டு தென்னிலங்கைக்கு ஏற்றுமதியாகிறது. இந்தக்குளத்தின் கட்டில் நின்று சூழலைத்திஜுசிப்பது பேரானந்தமானது அது சூழல் அவ்வளவு அழகானது சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடிய இந்த இடத்தை ஏராளமானவர்கள் பார்த்துச் செல்கிறார்கள்.

முத்தையன் கட்டினை சூழவுள்ள வனம் பெருவனத்தின் கூறாகும் ஒருபுறம் இது கூழாமுறிப்பைக்கடந்து பரந்து நெடுங்கேணியை அடுத்துள்ள வனத்துடன் இணைய, மேற்கே இரணைமடு கடந்து பெருத்த காடல்லாத மந்துக்காடாகியும் கொக்காவில் காட்டை அடுத்து வரும் பெருவனத்துடன் கலக்கும். தெற்கே அது பரந்து இருண்டு கிடக்கும் பெருவனமாக புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தின் பின்பாகம் தொட்டு தொடர்ந்து பேராற்றின் கிளையையும் கொண்டு உடையார்கட்டின் எல்லைவரை செல்கிறது. இதன் தெற்கெல்லை தென்கிழக்காக மணலாறுவரை படருகிறது. அருமையாகக் கிடைக்கும் பல மரங்கள் உள்ளே பதுங்கி தம்மை காத்துக்கொண்டிருந்தாலும், இராணுவ ஆக்கிரமிப்புகளின் போது ஏராளமான அரியமரங்கள் களவாடப்பட்டுவிட்டதால், வாழ்விழந்த மங்கையாக எமது வனம் கலங்கி நிற்கிறது.

முத்தையன்கட்டுக்கிராமமக்கள்கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள். காரணம் அவர்களுடையபெற்றோர்படித்தவர்கள். அதைவிட தாம் வேலையற்ற பட்டதாரிகளாக இருந்ததால் கிடைத்த நிலத்தில் உழைத்து முன்னேறினாலும் தமது மக்களும் மண்ணைக்கிழறி வாழ்வதை அவர்கள் விரும்பவில்லை. எனவே யுத்தச் சூழலையும் கருத்தில் கொண்டு பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பவே முயன்றார்கள். அதிகமானோர் அனுப்பிவிட்டனர். இப்போது குளம் அப்படியே இருக்கிறது. அதிலுள்ள வளமும் அப்படியே இருக்கிறது. ஆனாலும் முன்னைய அபிவிருத்தி வளர்ச்சி என்பன குறைந்துள்ளது. காரணம்உழைப்பவனிடம்நிலமில்லை. நிலமுள்ளவன் உழைப்பதில்லை.

# பதிவு செய்யாமல் தாமதப்படுத்தும் வாகனவர்த்தகர்களுக்கு அபராதம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

வாகன இறக்குமதிகளுக்கான தடைகளை படிப்படியாகத்தளர்த்தும் போது, பதிவு செய்யாமல் தாமதப்படுத்தும் வாகனவர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்க இலங்கை அரசாங்கம்திட்டமிட்டுள்ளது.

**அரசாங்கத்தின்கொள்கைநோக்கம்:**

வெளிநாட்டு நாணயப் பிரச்சினையை நிர்வகிக்க வாகன இறக்குமதிகளில் கட்டுப்பாட்டை படிப்படியாகக் குறைக்கவும், புதிதாக இறக்குமதிசெய்யப்படும்எந்தவொரு வாகனத்தையும்90 நாட்களுக்குள் பதிவு செய்யாவிட்டால் CIF (செலவீனம், காப்பீடு, சரக்குக் கட்டணம்) மதிப்பின் 3% அபராதத்தைவிதிக்க இலங்கை அரசு புதிய விதிமுறையைஅறிமுகப்படுத்தியுள்ளது. இது இலங்கை அரசின் நாணயநிலையை உறுதியாகச்செய்யும்நோக்கில் எடுக்கப்பட்ட ஒருநடவடிக்கை என்று நிதி அமைச்சின் மூத்த அதிகாரிதெரிவித்தார்.

**படிப்படியாக தளர்த்தும் இறக்குமதி தடைகள்:**

இலங்கை அரசாங்கம் அனைத்துப் பதிவுகளையும் 2024 நவம்பர் மாதம் தொடங்கி இறக்குமதி தடைகளை நீக்க முடிவுசெய்துள்ளது.

**பயணிகள் மற்றும் தொழில்துறை வாகனங்கள்:**

படிப்படையாக விதிகளை தளர்த்தும் திட்டத்தின் முதற்கட்டமாக, நவம்பர் 2024ல் சுற்றுலா பயணிகள் மற்றும்தொழில்துறை வாகனங்களுக்கான (பேருந்துகள், லொறிகள், backhoes, டிப்பர் லொறிகள் போன்றவை) இறக்குமதிதடைகள் நீக்கப்படும். இது சுற்றுலா மற்றும் போக்குவரத்துதுறைகளுக்கு நிவாரணத்தை வழங்கும்.

**தனிப்பட்ட பயன்பாட்டிற்கான வாகனங்கள்:**

2025 தொடக்கத்தில் தனிப்பட்ட பயன்பாட்டிற்கானவாகனங்களின் (கார்கள், வேன்கள்,ஜீப்புகள்) மீதானஇறக்குமதிதடைகள் தளர்த்தப்படும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. இந்த படிப்படையான அணுகுமுறை, நாட்டு நாணயக் கையிருப்பைச் சீராகக் கட்டுப்படுத்தவோடு, வாகனங்களின்சந்தைப் தேவைக்குபொருத்தமானமுறைமையினை உருவாக்குகின்றது.

**புதிய அபராத விதிமுறைகள்:**

வாகனங்களை 90 நாட்களுக்குள் பதிவு செய்யாத வாகனவர்த்தகர்களுக்கு CIF (செலவீனம், காப்பீடு, சரக்குக்கட்டணம்) மதிப்பின் அடிப்படையில் 3% அபராதம்விதிக்கப்படும். இதனால், வர்த்தகர்கள் உடனடியாகவாகனங்களைப் பதிவு செய்யும்படி வலியுறுத்தப்படுவர். மேலும், அதிக அளவில் கையிருப்பில் வாகனங்களைவைத்திருக்காமல் சந்தைப் தேவைகளுக்குஏற்பவாகனங்கள்இறக்குமதி செய்யப்படுவதை உறுதி செய்யவே இந்தக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

**துவிச்சக்கர/இருசக்கரவாகனங்கள், மின்சாரவாகனங்கள்:**

துவிச்சக்கர / இரு சக்கர வாகனங்களில் இறக்குமதிதடைகளைநீக்குவதற்கானதிட்டம் இன்னும் உறுதியாகவும்திட்டவட்டமான கால நிர்ணயமும் அறிவிக்கப்படவில்லை. அதே சமயம், சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார மூன்று சக்கரவாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது. மின்சாரமூன்றுசக்கரவாகனங்களைநோக்கிய மாற்றமானது பசுமை இயக்கத்தின் உலகளாவிய போக்குகளுடன் ஒத்துப் போகின்றது, போக்குவரத்துத் துறையில் கரியமில வாயுவைக் குறைப்பதற்கான பாதையில் இலங்கையை சிறந்த நிலைக்கு வைக்கின்றது.

வாகன அனுமதிகள் மீதான சீர்திருத்தம்:புதிய வாகனஅனுமதி முறையை அறிமுகப்படுத்தி, அரசுக்கு வருவாய்ஈட்டும் வகையில் சீர்திருத்தம் செய்யப்படும். இதனால் நிதிஆதரவைப் பெறுவதற்கு மேலும் பல வாய்ப்புகள் உருவாகும்.

**நாணய மேலாண்மையை முன்னிலைப்படுத்தும் கொள்கை:**

இறக்குமதி தடைகளை தளர்த்தும் பொருளாதாரச்சீரமைப்பின் முக்கிய அம்சமாக, 1 பில்லியன் அமெரிக்கடொலர் வரை வெளிநாட்டு நாணயம் வாகன இறக்குமதிகளுக்காக நாடு விட்டு வெளியேறலாம்எனஅரசாங்கம்கணக்கிட்டுள்ளது.

**நாணய மேலாண்மையின் முக்கியத்துவம்:**

இலங்கை தற்போதைய பொருளாதார சீர்செயலுக்குஅத்தியாவசியமானவெளிநாட்டு நாணய கையிருப்புகளைப்பாதுகாக்கும் நோக்கத்தில், இறக்குமதி தளர்வுகளைகட்டுப்படுத்தும்கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும். வாகன இறக்குமதிகளின்மீதானவரிவிதிப்புகள்மற்றும் 90நாள் பதிவு அவகாசம் போன்றமுறைகள், நாணயச்சீர்குலைவை தடுப்பதற்கான கட்டுப்பாடுகளைஅமைக்கின்றன.

இலங்கையின் பொருளாதார மீட்சியில் இந்த விதிமுறைகள்ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன. இதன் மூலம், சர்வதேசநிதி ஆதரவைப் பெறும் பொறுப்பை நிறைவேற்றுவதோடு, நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையை உறுதிசெய்யவும்அரசாங்கம்பாடுபடுகின்றது.

**பிரிவுகளின் வாகனத் தேவைகளுக்கான தாக்கம்:**

பொதுவாக, இந்த கொள்கைகள் வாகன வர்த்தகம், சுற்றுலா, கச்சா பொருட்கள் துறை போன்ற பல துறைகளுக்குவிளைவுகளை ஏற்படுத்தும். இரு சக்கர வாகனங்கள், சுற்றுச்சூழலுக்கான மின்சார வாகனங்கள் மற்றும் சுற்றுலாபயணிகளுக்கான போக்குவரத்துவசதிகள்போன்றபிரிவுகளுக்கு தேவையான கட்டுப்பாட்டினை சரியானமுறையில் அமுல்படுத்துவதன் மூலம், சந்தைத் தேவைகளைப்பூர்த்தி செய்யவும், பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கவும்முடியும்.

**பிரதான சவால்கள்:**

1. சந்தை வர்த்தகர்களின் எதிர்ப்பு – CIF (செலவீனம், காப்பீடு, சரக்குக் கட்டணம்) அடிப்படையிலான 3%அபராத விதிமுறை, வாகன வர்த்தகர்கள் மற்றும் இறக்குமதி தொழில்துறையில் எதிர்ப்பினை உருவாக்கும் வாய்ப்பு உள்ளது. சிலர் இதனை நேர்மறையான முறையில் பார்க்க முடியாமல் இருந்து வரலாம். அதே சமயம், வர்த்தகர்கள் விதிமுறைகளை தவிர்ப்பதற்கான வழிகளை தேடுவது அவற்றின் செயல்திறனை பாதிக்கக்கூடும்.

2. சுற்றுச்சூழலுக்கான சவால்கள் – மின்சாரவாகனங்களுக்கு பரிந்துரைக் கப்பட்ட மாற்றங்கள், இலங்கையின் மொத்த சுற்றுச்சூழல் திட்டத்துடன் பொருந்தும். இருப்பினும், மின்சார வாகனங்களுக்குதேவையான சார்ஜிங் நிலையங்கள் மற்றும் பராமரிப்புவசதிகள் குறைவாக இருப்பது உடனடி சவாலாகஉள்ளது.

3. பொதுமக்கள் மற்றும் வணிகத்துறையின் எதிர்ப்பு – புதியவிதிகள்

காரணமாக வாகன வர்த்தகங்கள் மற்றும்பொதுமக்களுக்குமேலதிகசெலவுகள் ஏற்படும்என்பதால், சிலர் இதைஎதிர்க்கலாம்.

**இலங்கை அரசாங்கத்தின் முக்கிய இலக்குகள்:**

இப்போதைய பொருளாதார சூழலில், இந்த கட்டுப்பாடுகளைசரியான முறையில் செயல்படுத்துவதுமுக்கியமாகும்.வெளிநாட்டு நாணயத்தைச் சீராக பராமரித்தல், நிலைத்த நிதிஆதரவைப் பெற்றல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்தபோக்குவரத்துக்கு ஊக்கம்அளிப்பதுஆகியவற்றைக்கொண்டு, ஒரு நிலையான மற்றும் தற்காலிகமான வளர்ச்சியை இலங்கை அரசாங்கம் உருவாக்க முடியும்.

**விவகாரங்களுக்கான பல்வேறு துறைகளின் தாக்கம்:**

இலங்கையில் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளைத்தளர்த்தியபோது, இதன் விளைவுகள் பல துறைகளைப்பாதிக்கும். சில முக்கியமான பிரிவுகளின் மேலாண் மையைப்பார்க்கலாம்:

1. சுற்றுலாத்துறை:

சுற்றுலாபயணிகளுக்கானபோக்குவரத்து வசதிகளைமேம்படுத்தும் நோக்கில் சுற்றுலா பேருந்துகள் மற்றும்பயணிகள் வாகனங்கள் மீதான தடைகள் முதற்கட்டமாகதளர்த்தப்பட்டுள்ளன. இதன் மூலம், வாகன வசதிகளைவழங்கி நாட்டின் சுற்றுலாத்துறைக்கு ஆதரவாகவெளிநாட்டு நாணயத்தை ஈட்டும் வழிகளை உருவாக்கி, நாட்டின் பொருளாதார நிலைப்பாட்டில் பங்கு பெறமுடியும்.

2. தொழில்துறை வாகனங்கள்:

கட்டுமானம், சரக்கு போக்குவரத்து மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவை (லாஜிஸ்டிக்ஸ்) துறைகள்ஆகியவற்றுக்கான தொழில்துறைவாகனங்களுக்கு(லொறிகள், ஹுழிஉவஜஊலிஎவி, டிப்பர் லொறிகள்) விதிகளைதளர்த்தியதில், இலங்கையின் உட்கட்டமைப்புமற்றும்வளர்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவு கிடைக்கும். இதுபொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய அம்சமாகவும், வேலைவாய்ப்பைஅதிகரிப்பதற்கும்உதவும்.

3. மின்சார வாகனங்கள்:

சுற்றுச்சூழல் தரமற்ற மூன்று சக்கர வாகனங்களுக்குஇறக்குமதிதடையைநிறுத்தி, மின்சார மூன்று சக்கரவாகனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுசுற்றுச்சூழலுக்கான பயணத்தில் சிறந்த மாற்றமாககருதப்படுகிறது. மேலும், பசுமை தொழில்நுட்பத்தைஊக்குவித்து,எரிபொருள் செலவுகளைத் தவிர்க்கும்வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

4. உயர்ந்த வருவாய் சீர்திருத்தங்கள்:

வாகனஅனுமதிவழங்கும்முறைமையில் செய்யப்பட்டமாற்றங்களால்,அரசுக்குமேலதிக வருவாயைப்பெறுவதற்கு வழிவகுக்கும். கடந்த கால அனுமதிகள்நிலைமையை மேம்படுத்தி, தற்போதைய கோட் பாட்டைமுழுமையாக பயன்படுத்தி நிதி ஆதரவைப் பெறுவதற்குவழிவகுக்கின்றது.

அரசாங்கம்சர்வதேசநிதி ஆதரவுகளைப் பெறும் நோக்கில்அனைத்து பொருளாதார மாற்றங்களையும்அறிமுகப்படுத்துவதோடு, வெளிநாட்டு நாணய கையிருப்பைகட் டுப்படுத்தும் பொருளாதார திட்டங் களைஉருவாக்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தின் நிலைத்தன்மைக்குஒருதிட்டமிட்டநடவடிக்கை:

இந்த வகையான கட்டுப்பாடுகள், வாகன இறக்குமதிகளில்ஒரு கட்டுப்பாடைச் சீராக நிறைவேற்றுவதற்கும், பொருளாதார வளங்களின் நிலைத்தன்மைக்கு உகந்ததாகஇருக்கும். முழுமையான விதிமுறைகளின் கீழ், இறக்குமதிகளின் மீதானகட்டுப்பாடுகளைமூன்றாவதுகட்டமாக ஒரேமுறை தளர்த்துவது இலங்கையின் நாணயநிலையை பலப்படுத்தும் வழியாக செயல்படும்.

இது போன்ற முறையான திட்டமி டப்பட்ட கொள்கைகள்சரியான முறையில் நடைமுறைக்கு வந்தால், இலங்கைபொருளாதாரத்தின் மீட்டெடுப்பு பாதையில் வளர்ச்சிஅடைவதற்கு பல வாய்ப்புகள் உருவாகும்.

**புதிய கொள்கை அமலாக்கத்தின் பாதிப்பு:**

வாகன இறக்குமதி விதிமுறைகளைத் தளர்த்தி, 90நாட்களுக்குள் பதிவு செய்யாத வாகனங்களுக்கு 3% CIF(செலவீனம், காப்பீடு, சரக்குக் கட்டணம்) அடிப்படையில்அபராதம் விதிக்கும் புதிய கொள்கை, பலவகையானமாற்றங்களைத் தரும். இதன் மூலம் குறிக்கோள்களாக உள்ளநாணயக் கட்டுப்பாட்டையும், சந்தைப் பிரதிபலிப்பையும்பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வெளிநாட்டுநாணயத்தின்மேலாண்மை:

இலங்கை நாட்டின் வெளிநாட்டு நாணய நிலையைநிர்வகிப்பதற்காக, இந்த புதிய வாகனப் பதிவின் அவகாசம்மற்றும் அபராதப் பணியின் செயல்திறனை உறுதிசெய்ய, அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். இதில் வெளிநாட்டுநாணயக் கட்டுப்பாடு, வெகுஜன இறக்குமதிகளை தடுக்கும்விதமாகும்.

**பொதுமக்கள் மற்றும் வணிகத்துறைக்கு விளைவுகள்:**

1. பொதுமக்கள் மேல் பாதிப்பு:

புதிய கோட்பாட்டினால் வாகன விலை உயர்வை சந்திக்கவேண்டிய நிலை உருவாகலாம், ஏனெனில் வர்த்தகர்கள்தாமதப்படுத்திய பதிவு காரணமாக அடிப்படை விலையைஉயர்த்தி விற்பனை செய்யலாம். இதனால், குறிப்பாகநடுத்தர வர்க்க மக்களுக்கு வாகனங்கள் வாங்குவதுசற்றுக் கடினமாகக் கூடும்.

2. வணிகதுறைக்கு சவால்கள்:

வாகனத் துறை வர்த்தகர்கள், குறிப்பாக முக்கியநேரங்களில்சந்தைக்குத்தேவையான அளவுவாகனங்களை வைத்திருப்பது சாத்தியமின்றிகஷ்டப்படும். மேலும், மொத்த வாகன வர்த்தகம் மீதானநிதிச் சுமை அதிகரிக்கக்கூடும்.

**சூழல் காப்புத் துறையின் வளர்ச்சி:**

மின்சார வாகனங்களுக்கு சிறப்பான ஊக்குவிப்புஅளிக்கப்படுவதால், நாட்டில் எரிபொருள் சார்ந்தவாகனங்களின் வருகை குறையும். இது சுற்றுச்சூழல் நடத்தைமுன்னேற்றம் பெறுவதற்கான சிறந்த வழியாகவும்விளங்குகின்றது.

**துறைசார் எதிர்காலப் பொறுப்புகள்:**

இலங்கை அரசு இத்தகைய கொள்கைகளின் மூலம், சர்வதேசநிதி உதவிகளைப் பெற்று, வெகுஜன நாணயப் பாதிப்புகளைசமாளிக்க, உறுதியான பொருளாதாரநிலைத்தன்மையைஉருவாக்க வேண்டும். மேலும், இது போன்ற நவீனமுறைமைகள் மக்கள் நலனுக்கும் பொருளாதாரப்பிரதிபலிப்பிற்கும் இணக்கமானதாகவும் இருப்பது அவசியமாகும்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழலுக்குப்பொருத்தமான முறையில், இந்த வகையான கட்டுப்பாடுகளைவினைத்திறனுடன் செயல்படுத்துதல்மிகஅவசியம்.சர்வதேசநிதி ஆதரவைப் பெற்றிடவும், நாட்டின் நாணய நிலையைஉறுதிசெய்யவும், இந்த கொள்கைகள் ஒரு நிலையானவளர்ச்சி பாதையைஅமைக்கும்.நிதிச்சீர்திருத்தங்கள் மற்றும்சரியானவர்த்தகக்கட்டுப்பாடுகளுடன், இந்த நவீனவிதிமுறைகள் இலங்கையின் பொருளாதார சீரமைப்பில்முக்கிய பங்காற்றும். மொத்தத்தில், இந்த வாகன இறக்குமதிகொள்கைகளும் வெளிநாட்டு நாணய மேலாண்மையும், நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும்முக்கியமான முன்னேற்றங்களை உருவாக்கும். சர்வதேச நிதிஆதரவைப் பெறுவதற்கான முறைகளைச் சரியாகப்பின்பற்றினால், இலங்கையின் பொருளாதாரம் எதிர்காலத்தில்நம்பகத்தன்மையும் வளர்ச்சியையும் அடையும்.

# தொழில் முயற்சிசார் பாடசாலைத் தோட்டங்கள்

பாடசாலைசிறுவர்கள்மத்தியில்ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு ஆதரவளிப்பதற்காக வடக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் தொழில் முயற்சிசார் பாடசாலைத் தோட்டங்களை அமைப்பதற்கு கடந்த வருடம் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் ஊடாக புதிய வெளிச்சம் விவசாய நிறுவனங்களின் துணையோடு200இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் நிதி நிதி மூலங்கள் மற்றும் பயிற்சிகள் வழிகாட்டல்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொண்டன.

தொழில்முயற்சி பாடசாலைத் தோட்டங்கள் திட்டமானது அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் 2.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் நிதியளிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படுகின்றது.

இந்த திட்டமானது தற்போதைய பொருளாதார நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களின், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

8 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான 100,000 இடைநிலைப் பாடசாலை மாணவர்களுக்கான கண்டுபிடிப்பு அடிப்படையிலானகற்றல்அணுகுமுறையை இந்தத் திட்டம் கொண்டுள்ளது, அங்கு அவர்களுக்கு தங்கள் பாடசாலைத் தோட்டங்களில்சத்தானவிளைபொருட்களின் ஆதாரங்களாக மாற்றும் திறனைப் பற்றிக் கற்றுக்கொடுக்கப்படும்.

இது மாறுபட்ட மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களுக்கு உதவுவதுடன், தொழில் முனைவோர் சிந்தனையை விவசாயத்தில் பயன்படுத்த உதவுகின்றது.

உணவுபாதுகாப்பு, ஊட்டச்சத்து, விவசாயம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் திறன்களை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, மூன்று மாகாணங்களைச் சேர்ந்த 505 பாடசாலை ஆசிரியர்களுக்கு கண்டுபிடிப்பு அடிப்படையிலான கற்றல் முறை குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.

பாடசாலை அதிகாரிகளுடன் இணைந்து திட்டத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வழிசெலுத்தலை மேற்பார்வையிடும் ஒரு முக்கிய திட்ட பங்காளியாக செயல்பட ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள விவசாயக் கழகத்திற்கு அதிகாரம் அளிக்கப்படும்.



இது தோட்டங்களில் இருந்து அறுவடைகளை விற்பனை செய்வதையும் மேற்பார்வையிடும், மேலும் தனியார் துறை நிறுவனங்கள், மாணவர்களின் பெற்றோர்கள், உள்ளூர் சந்தைகள் அல்லது ய்புது மூலம் தேசிய பாடசாலை உணவுத் திட்டம் உள்ளிட்ட விற்பனை நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, தோட்டங்களின் அறுவடைகள் வருமானம் ஈட்டுவதை உறுதிசெய்யும் – அதன் மூலம் திட்ட காலத்திற்கு அப்பால் தோட்டங்களின் நிலைத்தன்மையை இதுஉறுதிசெய்கின்றது.

இது தொடர்பில் இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின்உயர்ஸ்தானிகர்போல் ஸ்டீபன்ஸ் தெரிவிக்கையில் 'பாடசாலை தோட்டக்கலையானது குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன், கற்றலுக்கும் உதவும். பாடசாலைத் தோட்டக் கலையில் மாணவர்களை ஈடுபடுத்துவதும், ஊட்டச்சத்தின் பயன்கள் குறித்து அவர்களுக்கு கற்பிப்பதும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும்.

குடும்பத்தின் உணவுப் பாதுகாப்பிற்காக உங்கள் உணவை உற்பத்தி செய்வதன் பெறுமதியை சுட்டிக்காட்டுவதற்கு இந்த நிகழ்ச்சி உதவுகின்றது' என்றார்.

'அவுஸ்திரேலியா மக்களின் இந்த தாராளமான உதவியை நாங்கள் பாராட்டுகிறோம், இது பாடசாலை மாணவர்களிடையே உணவுப்பாதுகாப்பை வலுப்படுத்த மற்றும் நிலையான பாடசாலை முதல் வீட்டிற்கு அறிவு பரிமாற்ற அணுகுமுறையை செயல்படுத்தியுள்ளது' என்று இலங்கைக்கான ய்புது பிரதிநிதி விம்லேந்திர ஷரன் கூறினார்,

'பாடசாலைத் தோட்டங்கள் குழந்தைகள் சுறுசுறுப்பான கற்றலில் ஈடுபடுவதற்கு வளமான சூழலை வழங்குகிறது. உணவு நுகர்வுப் பழக்கவழக்கங்கள் மற்றும் புதிய விவசாயக்கருத்துகள்மீதானமனப்பான்மை மாற்றத்தைத் தூண்டும் வகையில், மாணவர்கள் மூலம் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும், விரிவாக்கம் மூலம் சமூகங்களுக்கும் அறிவு பரிமாற்றப்படும்' என அவர் மேலும் கூறினார்.

ய்புதுஆனது கல்வி அமைச்சு, விவசாயத் திணைக்களம், சுகாதார அமைச்சு மற்றும் ஊவா, மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களின் தலைமைச் செயலகம் ஆகியவற்றுடன்இணைந்து,சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய நடைமுறைகள் மற்றும் ஊட்டச்சத்து குறித்து குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு கற்பிக்கும்.

ஏற்கனவே பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான விவசாயம் மற்றும் பாடசாலை தோட்டம் தொடர்பான வழிகாட்டுதல்களும்புதியவெளிச்சம்போன்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கடந்த வருடங்களில் நடைபெற்ற பாடசாலைகளில் வீட்டு தோட்டங்களால் பாடசாலை தோட்டங்களின் மூலம் உருவாக்கப்பட்ட மரக்கறிகள் மற்றும் ஏனைய கிழங்கு போன்றவைகள் மாணவர்கள் ஊட்டச்சத்துக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கிறது என்று அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

# இயற்கை உணவு பொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்ய உதவும் HcOrganic.com தளத்தை தொடங்கிய க.சோமசுந்தரம்

**“சிறுவயது முதலே சொந்தமாக தொழில் செய்யவேண்டும் என்பது என்னுடைய கனவு, லட்சியம் எல்லாமேஅதுதான்,அதைபலமுறை பலவழிகளில்யோசித்துஇருக்கிறேன், பல தொழில்களில் முயற்சி செய்து தோல்வி அடைந்து இருக்கிறேன், என் தோல்வியில் இருந்து நான் ஒன்றை கற்றுக்கொண்டேன்.**

**பலரும்செய்யும்தொழிலைநாமும் செய்தால் வெற்றிபெற இயலாது, நமக்கு என்று ஒரு வித்தியாசமான பாதையை உருவாக்க வேண்டும் என்று யோசிக்கும் மக்களின் பிரச்சனைகளை நாம் தீர்த்து வைக்கும் தொழிலாக இருக்க வேண்டும் என முடிவு செய்து கொண்டேன், அதை மக்களின் ஆரோக்கியம் சார்ந்த தேர்வாக தேர்ந்து எடுத்தேன்”.**

இப்படியாக தங்கள் தொழிலை மக்களின் ஆரோக்கியத்தை காப்பதற்காக உருவாக்கி இருக்கிறார். க..சோமசுந்தரம் அவர்கள்.

நம் பல காலமாக பயன்படுத்தி வந்த இரசாயனபூச்சிக்கொல்லிகளின்விளைவாக இன்றைக்கு எல்லா பொருட்களிலும் இரசாயனங்களின் கலப்பு ஊடுருவிட்டது. மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இந்த இரசாயன பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவதை நாம் நிறுத்தாவிட்டால், எதிர்காலத்தில் மனித சமூகம் மிகப்பெரிய பாதிப்பை சந்திக்க வேண்டியதிருக்கும்.

இரசாயன உரம் இல்லாத இயற்கை முறை விவசாயம் ஏற்கனவே பல விவசாயிகளால் தொடங்கப்பட்டுவிட்டது. இதை எல்லா மட்டங்களிலும் கொண்டு செல்லும் போதுதான் இதன் பயனை எல்லோரும் அடைய முடியும்.

இந்த வகையில் இயற்கை உணவு பொருட்களை நேரடியாக உற்பத்தியாளர்களிடம் நுகர்வோருக்கு கொண்டு செல்வதற்காக HCORANIC.com என்ற இணைய தளத்தை க.சோமசுந்தரம் என்ற பட்டதாரி இளைஞர் தொடங்கியிருக்கிறார்.

சோமசுந்தரம் அவர்களின் தொழில் முனைவு, அவர் சந்தித்த சிக்கல்கள் மற்றும் சவால்கள், அவரின் திட்டம் பற்றி தெரிந்து கொள்ள TamilEntrepreneur.com அவரிடம் நேர்காணலை நடத்தியது.

**உங்கள் குடும்பம் மற்றும் கல்வி பின்னணி பற்றி குறிப்பிடுங்கள் :**

நான் சேலம் மாவட்டத்தை சார்ந்தவன், நான் BE (இயந்திரவியல்) 2013 ஆம் ஆண்டு சத்தியமங்கலம் பன்னாரி அம்மன் கல்லூரியில் முடித்தேன், அதன் பிறகு மும்பையில் 1 வருடம் பணிபுரிந்துவிட்டு கடந்த 2 வருடங்களாக தொழில் செய்து



வருகிறேன்,


என்னுடைய அப்பா பெயர் ப.கருணாகரன் தினக்கூலி அடிப்படையில் டிரைவர் ஆக பணிபுரிகிறார், அம்மா பெயர் க.ராஜாத்தி தினக்கூலிஅடிப்படையில்செங்கல்அறுக்கும் வேலை செய்து வருகிறார், என் தங்கை பெயர் க.சந்தியா வீட்டின் அருகில் உள்ள பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார்.

**நீங்கள் HcOrganic.com நிறுவனத்தை தொடங்கியதற்கான பின்னணி காரணம் என்ன?**

எங்கள் அம்மா அடிக்கடி சொல்லுவார்கள் நாங்கள் அந்த காலத்தில் அதிகமாக வேலை செய்தோம், 20வது என்றாலும் நடந்தே செல்லுவோம், நோய் என்றால் என்னவென்று தெரியாமல் இருந்தோம் என்று, இதை ஆழமாக யோசித்து பார்த்தால் அவர்கள் சாப்பிட்ட உணவு பழக்கம் முறையே ஆகும்,.

இரசாயன உரம் இல்லாத இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட உணவு பொருட்களான கம்பு, சோளம், கேழ்வரகு, திணை, குதிரைவாலி, செக்கில் ஆட்டிய எண்ணைய் அவர்கள் சாப்பிட்டார்கள் நோய் இல்லாமல் இருந்தார்கள், ஆனால் நாம் இரசாயனம் உரத்தை கலந்த உணவை தான் சாப்பிடுகிறோம், இதை மாற்ற வேண்டும், மக்களுக்கு ஆரோக்கியமான உணவு கிடைக்கவேண்டும் என்பதே நோக்கம்.

இதற்கு இணை நிறுவனர்கள் இல்லை, நான் இதற்கு முன் முயற்சி செய்த தொழிலில் இருந்தார்கள் ஆனால் என்னுடைய இந்த இயற்கை உணவு (Organic Product) பற்றிய தொழிலை செய்யலாம் என்றதும்




விலகி கொண்டனர்.

உங்கள் நிறுவனத்தைப் பற்றியும், அதன் தற்போதைய நிலையைப் பற்றி குறிப்பிடுங்கள் :

விளைவிப்பவர்களே விலையை நிர்ணயிப்பவர்கள் என்ற தாரக மந்திரமே எங்கள் குறிக்கோள். எங்கள் நிறுவனம் www.HcOrganic.Com 2017 மார்ச் அன்று துவக்க பட்டது, நாங்கள் ஏற்கனவே இயங்கிகொண்டிருந்த அதே அலுவலகத்தில் 100 சதுர அடியில் துவக்கப்பட்டது, எங்கள் நிறுவனம் ஒரு E-commerce ஐ அடிப்படையாக கொண்டது.

இயற்கையான முறையில் எந்த ஒரு ரசாயனம் இல்லாத உணவு பொருளை உற்பத்திசெய்யும் விவசாயிகளும், Organic பொருட்கள் விற்பனை செய்பவர்களும், இயற்கையை பாதிக்காத பொருட்களும் (பாக்குமட்டை தட்டு, பேப்பர் கப், மண் பானை போன்ற eco product) தயாரிப்பவர்களும் நம் இணைய தளத்தில் அவர்களின் பொருட்களை விற்பனை செய்யலாம். இயற்கை சார்ந்த பொருள் தேவைப்படும் பொதுமக்கள் நம் இணையதளத்தில் வாங்கி கொள்ளலாம்.

இதனால் மக்களுக்கு நேரடியாக பொருட்களை கொண்டு சேர்க்க முடியும். மக்களுக்கு இயற்கை பொருள் பற்றிய விழிப்புணர்வும் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

எங்கள் நிறுவனம் தற்போது நல்ல வளர்ச்சியை கொண்டு உள்ளது, இது இன்னும் லிஜயிஷ்ஜள மூலம் லிஷ-ளஷ செய்யும் வசதி மார்ச் 1 அன்று கொண்டுவரப்படும், மேலும் இது Mobile application Offline மூலம் ஒரு நாளைக்கு சராசரியாக ரூ.8000 மதிப்புள்ள பொருட்கள் விற்பனை நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 8 கோடி மக்களுக்கும் இந்த இயற்கையான உணவு தேவைபடுகிறது, இதே போன்று உலகில் உள்ள அனைவர்க்கும் இயற்கை உணவு கிடைக்க வேண்டும், அனைத்து மக்களும் எங்களுடைய வாடிக்கையாளர்களே

உங்கள் நிறுவனத்தை தொடங்கியபோது எந்த மாதிரியான சவால்களை சந்தித்தீர்கள்:

இதை நான் முதலில் துவங்கும்போது பலரும் சொன்ன வார்த்தை இது தான், இந்த தொழிலை செய்யாதே கம்பு, சோளம், அரிசி, எண்ணை எல்லாம் மக்கள் அருகில் உள்ள கடையிலேயே வாங்கிவிடுவார்கள். உன் தொழில் வெற்றிபெறாது என்று, ஆனால் நான் அவர்களின் பேச்சை கேட்டுகொள்வேன், ஆனால் அதில் எனக்கு எது தேவையோ அதை மட்டும் எடுத்து கொண்டேன்.

நான் என்னுடைய கடைசி தொழிலை (Home Appliances sales) தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக என்னுடைய சேமிப்பு என்று ஏதும் இல்லாமல் இருந்தது, ஒரே ஒரு இருசக்கர வாகனம் மட்டும் தான் இருந்தது, ஆனால் என்னிடம் நம்பிக்கை இருந்தது, என்னுடைய அவசர கால பணத்தை கொண்டும், என்னுடன் கூட படித்த நண்பன் எனக்கு சிறு தொகையை முதலீடாக வைத்தும் நான் தொழிலை தொடங்கி இருக்கிறேன்.

**உங்கள் தொழில்முனைவினால் சமூகத்திற்கு எந்த மாதிரியான தீர்வுகள் கிடைக்கும் :**

எங்கள் நிறுவனம் மூலம் அனைத்து வித மக்களுக்கும் இயற்கையான ஆரோக்கியமான உணவு எளிதிலும் விலை குறைவாகவும் கிடைக்கும், மேலும் மக்களுக்கு இயற்கை பற்றிய விழிப்புணர்வும் கிடைக்கும. மக்களின் கருத்துகளை புரிந்துகொண்டு மக்களின் முழு திருப்திக்காக Cash on delivery வசதியும் , பொருளை திரும்ப கொடுக்கும் வசதியும், பணம் திரும்ப பெரும் வசதியும் கொடுத்து உள்ளோம், மக்களின் ஆரோக்கியமும் மேம்படும் இதனால் நோய் இன்றி வாழமுடியும்.

அடுத்ததாக உலகின் முதுகெலும்பாக இருக்க கூடிய விவசாய துறை மேம்படும், விவசாயிகள் நேரடியாக அவர்களின் பொருட்களை விற்பனை செய்வதால் அவர்களின் பொருளாதாரமும் மேம்படும், ரசாயனம் இல்லாத உணவு பொருட்களை உற்பத்திசெய்வதால் உலகின் மண் வளமும் காக்கப்படும்.

ஒரு விவசாயி அவர்களின் பொருட்களை ஒரு தரகர் மூலம் விற்பனை செய்வதால் 20% முதல் 40% வரை அவர்களின் பொருட்களின் விலையை குறைத்து தரவேண்டி இருக்கும், ஆனால் நமது நிறுவனம் மூலம் விற்பனை செய்யும் பொது மிக குறைந்த சேவை கட்டணம் மட்டுமே பெறபடுகிறது. விவசாயிகள் அவர்களின் பொருட்களின் விலையை அவர்களே தீர்மானிக்க முடியும். இதனால் விவசாயிகளும் அதிக லாபத்தில் பொருளை விற்க முடியும், மக்களும் குறைந்த விலையில் இயற்கை பொருட்களை வாங்க முடியும்.

# நவீன விவசாயமும் உணவுப் புரட்சியும்

நம்மிடையே உள்ள பாரம்பரிய வேளாண்மை முறைமைகளில் நவீன நுட்பங்களை புகுத்தி, இலங்கையில் ஒரு விவசாயப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான நவீன விவசாயக் கொள்கைகளை உருவாக்கும் சாத்தியங்கள் குறித்து ஆராய்ச்சிமுடிவுகளுடன்தர்க்கித்து, மக்களுக்கும், விவசாயத்துறை சார்ந்தவர்களுக்கும் மற்றும்கொள்கைவகுப்பாளர்களுக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது ஆராய்ச்சித் துறை மாணவர் களுக்கு உசாத்துணை ஆதாரமாகவும் 'இலங்கையின்வேளாண்முறைமையில்நவீன நுட்பங்கள்' என்ற இந்தக்கட்டுரைத்தொடர் அமைகிறது. இலங்கையின் பாரம்பரிய வேளாண்மை முறைமையில் உள்ள சாதக - பாதகங்கள், அதிலுள்ள போதாமைகளை நிவர்த்திக்கும் வகையில் நவீன நுட்பங்களைப் புகுத்துதல், நவீன நுட்பங்களால்உண்டாகக்கூடியவிளைவுகள், இலங்கையில் பசுமைப்புரட்சிக்காக முன்வைக்கப்படவேண்டிய விவசாயக் கொள்கைகள் என்பன பற்றி விரிவாகவும், ஆய்வுத்தளத்திலும் இந்தக்கட்டுரைத்தொடர் விபரிக்கின்றது.

கடந்த பல நூற்றாண்டுகளாகப் பாரம்பரிய விவசாய முறைகளைப் பயன்படுத்தி வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப சுகாதாரமான உணவை, எமது விவசாயப் பெருமக்களால் அனைத்து மக்களுக்கும் வழங்க முடிந்தது. எனினும் நான்காம் அத்தியாயத்தில் குறிப்பிட்டது போல் 18 ஆம் நூற்றாண்டில் மனிதப் பெருக்கத்தின் அசுர வளர்ச்சியானது மிகப் பயங்கரமான உணவுப் பஞ்சம், இடப்பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை, காலநிலை மாற்றம், நாடுகளுக்கு இடையான போட்டி எனப் பல விளைவுகளை ஏற்படுத்தியது. பாரம்பரிய முறைகள் மூலமான உணவு உற்பத்தி போதுமானதாக இருக்கவில்லை என்பதே இவைஅனைத்துக்கும்பிரதானகாரணமாகும். இதற்கு மாற்றீடான தந்திரோபாயமாக பாரம்பரிய விவசாய முறைமைகளில் நவீனதொழில்நுட்பங்களைப்புகுத்தி நவீன விவசாயத்துக்கு செல்லவேண்டியதன் கட்டாயத்தைஉலகிற்குஉணர்த்தியது. இதற்கு உறுதுணையாகஅந்தக்காலகட்டத்தில்ஏற்பட்ட இயந்திரத்தொழில்நுட்பங்களின்வளர்ச்சியும், விவசாயத்துறையில் மேற்கொள்ளப்பட்ட அயராத ஆராய்ச்சிகளுமே காரணம். தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளையும் விவசாய ஆராய்ச்சிகளையும் இணைத்து



உணவு உற்பத்தியை பலமடங்கு அதிகரிக்கலாம்என அமெரிக்க விஞ்ஞானி நார்மன் போர்லாக் மெக்ஸிகோவில் செயற்படுத்திக் காட்டி பசுமைப் புரட்சியை உலகறியச் செய்து, உணவுப் புரட்சியை ஏற்படுத்திக் காட்டியதன் மூலம் இன்று பல நாடுகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும்வழிசமைத்தார். இந்தஉணவுப் புரட்சிக்கு கணினி, விஞ்ஞானம் மற்றும் தொலைத்தொடர்பு துறையில் தினமும் நிகழும்மேம்பாடுகள்மற்றும்கண்டுபிடிப்புகள் மேலும் மேலும் நவீன உத்திகளாக விவசாயத்துறையில் உட்புகுத்தப்பட்டு நவீன விவசாயம் உலகம் முழுவதும் எவ்வாறு தொழில்நுட்ப விவசாயமாகப் பரிணமித்திருக்கிறது என்பதையே இந்த அத்தியாயம் ஆராய்கிறது.

### விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்கள் (Modern Technologies in Agriculture)

#### உயர்தொழினுட்பப்பண்ணைஇயந்திரங்கள்

விவசாயத்தில் தொழில்நுட்பம் ஊடுருவத் தொடங்கியதில் இருந்துபல்வேறுவகையான கீழ் வரும் நவீன உபகரணங்களும் அவற்றினுடைய பல்வேறு பயன்பாடுகளும் விவசாயத்துறையில் மனித வலுவின் பயன்பாட்டையும், நேரத்தையும், மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ள இயற்கை வளங்கள் வீணாவதையும், அபரிமிதமான செயற்கைவிவசாயஇயற்கைஉள்ளீடுகளின் பாவனையைக் குறைத்து, சூழல் மாசடைதலைத் தடுத்து, உற்பத்திச் செலவைக்கட்டுப்படுத்தி, குறைந்தகாலத்தில் மிகையான உணவு உற்பத்தியைப் பெற வழி சமைத்துள்ளன.

### நவீன பண்ணை இயந்திரங்கள் (Modern Farm Machineries):

பயிர்களை நடவும், விதைகளை விதைக்கவும், களைகளை அகற்றவும், மண்ணைப் பண்படுத்தவும் நவீன மற்றும் ஒருங்கிணைந்த அறுவடை மற்றும் நடவு இயந்திரங்களின் ஆதிக்கம் உலகம் முழுவதும் விவசாயத்தில் பெருமளவு செலவைக் குறைத்ததோடு, முன்கூட்டியே நடவு செய்வதும், சரியான நேரத்தில் அறுவடை செய்வதும், மகசூல் சரியான நேரத்திற்குள் சேமிக்கப்படுவதையும், விவசாயிகள் மிகக் குறுகிய காலத்திற்குள் பரந்த அளவிலான உணவை உற்பத்தி செய்வதையும் உறுதி செய்தது. குறிப்பாக, இந்த இயந்திரங்களின் மேம்பாட்டில் இன்று ஓட்டுநர் தேவையில்லாத ஓட்டோபைலட் டிராக்டர்களில் ஜிபிஎஸ் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது

இத்தகைய தொழில்நுட்பம் விவசாயத்தில் சிறந்த மற்றும் திறமையான விவசாய நடைமுறைகளைஊக்குவிக்கிறது. எடுத்துக்காட்டாக, தன்னியக்க டிராக்டர்கள் மற்றும் தெளிப்பான்கள் கண்காணிப்பு அமைப்புகளுடன் பொருத்தப்பட்டுள்ளதனால், அவை மனிதனால் விடப்படக்கூடிய பிழையை நீக்குகின்றன மற்றும் இறுதியில் எரிபொருள் மற்றும் இதர வளங்களைச் சேமிக்கின்றன.


**Global Information System (GIS) மென்பொருள்மற்றும் Global Positioning System (GPS) விவசாயம்:**

GIS மென்பொருள் விவசாய நிலங்களின் வெப்பநிலை, மழைவீழ்ச்சி, பயிர்விளைச்சல், மண்ணின் வகை மற்றும் பலவற்றை வரைபடமாக்க அனுமதிக்கிறது. இந்தத் தரவுகள் பண்ணையாளர்களுக்கும், பண்ணைகளைவாங்கமுனைபவர்களுக்கும் அல்லது பண்ணையில் முதலீடு செய்ய முனைபவர்களுக்கும் மற்றும் வணிக உரிமையாளர்களுக்கும் பண்ணையின் கடந்தகால உற்பத்தி மற்றும் விளைதிறன் நிலைமைகளைப் படிப்பதன் மூலம் எதிர்காலத்தைத் திட்டமிடவும் உதவும். மேலும் GPS உடன் இணைக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பங்கள் தன்னியக்க டிராக்டர்கள், விதைகள் மற்றும் அறுவடை இயந்திரங்களை தூர இடங்களில் இருந்து இயக்கவும் மற்றும் ஒருங்கிணைத்து ஒரு துல்லியமான உத்தியைப் பின்பற்றி வயல்களில் வேலை செய்யவும் வழிகாட்டுகின்றன. GIS மென்பொருள் விவசாய அமைப்பில் ட்ரோன்கள் மற்றும் செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி பயிரின் நிலைமை (உயரம், இலைகளின் நிறம்), உயிரிகள் (பீடைகள், நன்மை பயப்பவை, etc), களைகளின் இருப்பு, நிலப்பரப்பு மற்றும் வானிலை ஆகியவற்றை வான்வழி மதிப்பீடு செய்து பண்ணையாளர் அல்லது சேவை வழங்குநர் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் உதவுகிறது.

### மண் மற்றும் நீர் உணரிகள் (Soil and Water Sensors):

செயற்கைமண்மற்றும்நீர்உணரிகள்

உயிரிகள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பார்ப்பதற்கும், சூழல் மாற்றங்களை அறிவதற்கும் தங்களிடம்



உள்ள புலன்களைப் பயன்படுத்துகின்றன. மனிதர்களும் இவ்வாறு வரையறுக்கப்பட்ட உணர்திறன் மிக்க புலன் அங்கங்களை விவசாயத்திலும் சில முடிவுகளை எடுக்கப் பயன்படுத்தினார்கள். ஆனால் மண்ணில் உள்ள போசணை அளவுகளை மற்றும் பயிரில் உள்ள போசணை அளவுகளை பரிசோதனை செய்ய முடியாமல் அல்லது உடனடியாக அறிய முடியாது தடுமாறினார்கள். ஆனால் இன்று விஞ்ஞான வளர்ச்சி தந்த செயற்கை உணரிகளால் (ரோபோடிக் சென்சார்கள்) , நாம் பார்ப்பதற்கு அப்பால் உள்ள தரவையும் வழங்குகின்றன. மண்வெப்பநிலை, மண்ணின் அமில காரத்தன்மை (pH), காற்றின் மற்றும் மண்ணின் ஈரப்பதம், தாவர ஆரோக்கியம் மற்றும் பூச்சி அழுத்தம் போன்ற அனைத்து நிலைகளையும் செயற்கை உணரிகளால் கண்காணித்து தரவுகளை உடனடியாக வழங்க முடியும். இன்று தொழில்நுட்ப மேம்பாட்டில் இயங்கும் பண்ணைகள் செயற்கைஉணரிகள், உணரிகள் பொருத்திய ரோபோக்களைப் பயன்படுத்தப்படும்போது மனிதப் பிழையைக் குறைக்கலாம் மற்றும் வேலை நேரத்தை மிகவும் திறமையாக நிர்வகிக்கலாம். இந்த உணரிகள் மூலம் பெறப்படும் தகவல்கள் துல்லியமானவை மட்டுமல்ல, விவசாயிகளுக்கு விரைவாகவும் தொலைதூரத்திலும் தெரிவிக்கப்படுகின்றன. கணினிமயமாக்கப்பட்ட உணரிகளால் தரவுகளினை ஆராய்ந்து தேவையான செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள முடியும். உதாரணமாக, மண்ணின் ஈரப்பதனை நிர்வகிக்கும் உணரிகள் மண்ணின் நீர் குறையும் போது கணினிக்கு அறிவித்து நீரைத் தேவையான அளவு பயிருக்கு இறைக்கின்றன. உணரிகள் வயல்களின் நிகழ்நேர நிலைமைகளின் அடிப்படையில் பயிர்களுக்கான பல்வேறு விளைவுகளை துல்லியமாக கணிக்கும் விவசாய வழிமுறையை உருவாக்கி விவசாயிகளுக்கு பயிர் இழப்புகளைத் தடுக்கவும், லாபத்தை அதிகரிக்கவும், திட்டமிடவும், விவசாய முறைமைகளை மாற்றியமைக்கவும் உதவும்.

### செயற்கைக்கோள் புறத்தோற்ற படத் தொழில்நுட்பம் (Satellite Imaging and Phenotyping):

செயற்கைக்கோள்கள் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, இவற்றில் ஒன்று, செயற்கைக்கோள்களை விவசாயத் தேவைகளுக்காகப் பயன்படுத்துதல். நவீன செயற்கைக்கோள்கள் விவசாய நிலங்களில் வளரும்பயிர்களின்துல்லியமானபடங்களை விவசாயிகளுக்கு அனுப்பி, விவசாயிகள் அவற்றை பொருத்தமான நிறமாலைக் குறியீடுகளிலிருந்து தரவுகளை இணைக்க அனுமதிக்கின்றன.

**விவசாயத்தில் நான்கு முக்கிய நிறமாலைக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.**

Normalized Difference Vegetation Index (NDVI) ன்தாவரங்களின் இயல்பாக்கப்பட்ட வேறுபாட்டுக் குறியீடு

Normalized Difference RedEdge (NDRE) ன்இயல்பாக்கப்பட்ட வேறுபாட்டு RedEdge]

Canopy Chlorophyll Content Index (CCCI) ன்விதான நிறப்பொருள் உள்ளடக்க அட்டவணைதி

Modified Soil-Adjusted Vegetation Index (MSAVI) மாற்றியமைக்கப்பட்ட மண்-சரிசெய்யப்பட்ட தாவர அட்டவணைதி

இதில் முதல் மூன்று நிறமாலைகளையும் பயன்படுத்தி பயிர்களின் நிறப்பொருள் அளவை ஆய்வு செய்து உரக் குறைபாட்டினால் (குறிப்பாக நைதரசன்) பயிர்கள் பாதிப்படையாமல் விவசாயிக்கு துல்லியமானஉரங்களைத்தெளிக்க/வழங்க அனுமதிக்கும். விதைகள் விதைப்புச்செய்து அல்லது நாற்றுக்கள் இயந்திரங்கள் மூலம் நடவு செய்த தரைகளில் பயிர்கள் வளராத அல்லது பயிர்கள் பட்ட இடங்களைக் கண்டறிய MSAVI பயன்படுத்தப்பட்டு மேலதிக விதைப்புகளைச் செய்ய உதவுகிறது. இவற்றின் மூலம் மிகக் குறைந்த மனிதவலுவுடன் விவசாயி தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியும். மேலும் ஆளில்லா விமானங்கள் எடுக்கும் செயற்கைக்கோள் படங்கள் மூலம் தாவர நோயினால் அல்லது பீடையினால் பாதிக்கப்பட்ட இடங்களை இனம் கண்டுகொண்டு அந்தப்பகுதிகளுக்கு மாத்திரம் தெளிக்கும் டிரோன் மூலம் தெரிவு செய்த பீடை நாசினிகளைத் தெளிப்பதன் (Intelligent spray) மூலம் செலவு குறைவடைவதோடு சுற்றுப் புறச் சூழல் மாசடைதலும் தவிர்க்கப்படும்.

### உட்புற விவசாயம் (Indoor Farming) :

உட்புற விவசாயம் என்பது ஒரு மூடிய மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பயிர் செய்வதைக் குறிக்கிறது. செயற்கை வளர்ச்சி விளக்குகள் உட்புற இடத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன, இது வளரும் செயல்முறையின் மீது அதிக கட்டுப்பாட்டை வழங்குகிறது. நகர்ப்புற உட்புற வீட்டு விவசாயம் மிகவும் பிரபலமாகி வருகிறது, இது சில பயிர்களை வளர்ப்பவர்களுக்கு வெளியில் உள்ள வானிலையைப் பொருட்படுத்தாமல் ஆண்டு முழுவதும் வளர வழி சமைக்கிறது. சமீபத்திய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட ஒளி-

காலும் இருவாயிகளைக் கொண்ட எல்.இ.டி மின்குமிழ்கள் மூலம் மலிவான மற்றும் சிறந்த முறையில் உருவாக்கப்பட்ட நவீன விவசாய தொழில்நுட்பக் கட்டமைப்புகள் மூலம் பயிர் உற்பத்தியை எளிதாக்கியுள்ளன

இதைத் தவிர சிறிதளவு இடம் கிடைக்கக் கூடிய இடங்களில் குறிப்பாக நகர்ப்புற மொட்டை மாடிகளில் தானியங்கி வலை இல்லங்கள் (Automated Net House) அமைத்து மண் இந்திய விவசாயம் மூலம் அல்லது சாடி விவசாயம் மூலம் மிகக் குறைந்த மனித வலுவுடன் பீடைகளின் தாக்கம் இல்லாத மரக்கறிகள் மற்றும் பழங்களை அதிக விளைச்சலுடன் அதிகளவில் உற்பத்தி செய்ய முடியும்.

### செங்குத்து விவசாயம் (Vertical Farming)

செங்குத்துவிவசாயமுறைகள்



செங்குத்துவிவசாயம்என்பதுசெங்குத்தாக உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளில் பயிர்களை வளர்ப்பதைக் குறிக்கிறது. பயிர்களை செங்குத்தாக வளர்ப்பதன் மூலம், விவசாயிக்கு வழக்கமான வரிசை விவசாயத்தை விட குறைவான நிலமே தேவைப்படுகிறது. இந்த நுட்பம் முதன்மையாக நகர்ப்புற அமைப்புகளில் பயன்படுத்தப்பட்டாலும், உற்பத்தியை அதிகரிக்க விரும்பும் எவரும் செங்குத்தாக வளர்வதன் மூலம் பயனடையலாம். செங்குத்து விவசாய நுட்பங்களில் மண்ணின் பாரம்பரிய பயன்பாடு, ஊட்டச்சத்து–அடர்ந்த நீரைப் பயன்படுத்தும் ஹைட்ரோபோனிக் நுட்பங்கள் மற்றும் நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களை தாவர வேர்களில் மட்டுமே தெளிக்கும் ஏரோபோனிக் நுட்பங்கள் ஆகிய இரண்டும் அடங்கும். பாரம்பரிய விவசாயத்தை விட செங்குத்து விவசாயத்திற்கு பொதுவாக 70 சதவீதம் குறைவான தண்ணீர் தேவைப்படுகிறது. செங்குத்து விவசாயத்திற்கான தொழிலாளர் தேவைகள் பெரும்பாலும் குறைவாகவே இருக்கும், மேலும் சில செங்குத்து பண்ணைகள் தொழிலாளர் தேவைகளை இன்னும் குறைக்க ரோபோ நடவு மற்றும் அறுவடையை செயல்படுத்துகின்றன.

ரேடியோ அதிர்வெண் அடையாளத் தொழில்நுட்பத்துடன் (Radio Frequency Identification [RFID Technology] சந்தைப்படுத்தல்:

'பார் கோட்' தொழில்நுட்பம் என்பது விவசாயத்திற்கு மட்டுமே சொந்தமானது அல்ல. நவீன விவசாயத்தில் ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பத்தை (RFID) இணைப்பது பயிர்க்கண்காணிப்பை மேம்படுத்தி இலகுவாக கலப்படம் இல்லாமல் சந்தைப்படுத்தலாம் என்று விவசாயிகள் கண்டறிந்துள்ளனர். RFID என்பது 'பார்கோட்' போன்றது. ஆனால் பல அடி தூரத்தில் இருந்தும், மண்ணின் வழியாகவும் ஸ்கான் செய்ய முடியும். RFID குறிச்சொற்களை 2 லுய வரையிலான தரவுகளுடன் நிரலாக்க முடியும், பயிரின் பெயர், இனம், இடம் நடவு செய்த திகதி மற்றும் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் ஆகியவற்றை சுட்டி இடுவதற்கு (Labelling) அவற்றை எளிதாக்குகிறது. யூய்ணூம் பண்ணைப் பொருட்கள் சந்தைக்கு அனுப்பப்படும்போது அவற்றைக் கண்காணிப்பதை எளிதாக்கும். ஒரு எளிய ஸ்கேன் மூலம் தயாரிப்பின் அத்தனை விபரத்தையும் வெளிப்படுத்தும். RFID தொழில்நுட்பம் தயாரிப்பில் தரவைப் பாதுகாப்பாகச் சேமிப்பதன் மூலம் மனிதப் பிழையைக் குறைக்கலாம். RFID தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் போது, சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் உணவுப் பொருட்களின் உண்மைத் தரவுகளை அறிந்து நம்பிக்கையுடன் வாங்க முடியும்.

இவ்வாறாக வளர்ந்துவரும் நவீன தொழில்நுட்பங்களை தினம் தினம் விவசாயத்தில் புகுத்தி பசுமைக்கு புதுமை சேர்த்து உணவு உற்பத்தியில் பல நாடுகள் அதிக லாபத்தை ஈட்டிவருவதோடு, சிறிய நிலப்பரப்பில் இருந்து பன்மடங்கு விளைச்சலையும் பெறுகின்றன. இதற்கு உதாரணமாக மிகச் சிறிய நாடுகளாக இருக்கின்ற இஸ்ரேல், நெதர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்றவற்றைக் குறிப்பிடலாம். இருந்தாலும் இன்று உலக வல்லரசுகளாக தம்மை காட்டிக் கொள்ள போட்டி போட்டுக் கொண்டிருக்கின்ற நாடுகள் இவற்றை மிகப் பரந்த அளவில் பயன்படுத்தி தமது நாட்டில் தன்னிறைவு அடைந்தது மட்டுமல்லாமல் உலக மக்களுக்குத் தேவையான உணவின் பெரும் பகுதியை தாமே உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து பணக்கார நாடுகளாக தொடர்ந்து வலம் வருகின்றன. இவற்றில் அபரிமிதமான உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்ற முதல் ஐந்து நாடுகளின் உணவு உற்பத்தித் தரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| இல | நாடுகள் | உணவு உற்பத்தித்திறனும் சிறப்பு அம்சங்களும் |
|---|---|---|
| 1 | சீனா | [illegible] |
| 2 | அமெரிக்கா | [illegible] |
| 3 | பிரேசில் | [illegible] |
| 4 | இந்தியா | [illegible] |
| 5 | ரஷ்யா | [illegible] |

Reference: https://www.bookmycrop.com/blog-details/top-10-countries-for-agriculture-production-in-2022

தொழில் நுட்ப விவசாயத்தினூடு உணவு உற்பத்தியில் உலகை ஆளும் ஐந்து நாடுகளும் அவற்றின் உற்பத்திச் சிறப்பு அம்சங்களும்

இந்த நாடுகளைப் போல் நமது நாடும் விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்து உணவுத் தேவைக்காக மற்ற நாடுகளிடம் கையேந்தாது, விவசாயத்துறை சார் நிபுணர்களின் ஆலோசனையை செவிமடுத்து, அரசியல் தலையீடுகளையும் ஊழலையும் களைந்து தற்சார்பு நவீன விவசாயத்தின் மூலம் மற்ற நாடுகளுக்கு சவால்விடும் வகையில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதே விவசாயத்தை நேசிக்கும் அனைவரினதும் விருப்பம்.

# பங்குச் சந்தை என்பது

பங்குச் சந்தை என்பது நிதிச் சந்தையின் ஒரு முக்கிய அங்கமாகும், இது பங்குகள், பத்திரங்கள் மற்றும் பிற பத்திரங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் ஒருமையமாக செயல்படுகிறது. நிறுவனங்களுக்கு மூலதனத்தை திரட்டவும், முதலீட்டாளர்கள் தகவலறிந்த முதலீட்டு முடிவுகளை எடுக்கவும் உதவுவதன் மூலம் பொருளாதாரத்தில் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

பங்குச் சந்தைகளின் தோற்றம், அவற்றின் சரியான பொருள், பல்வேறு வகைகள் மற்றும் அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆராய்வோம்.

### பங்குச் சந்தையின் தோற்றம்

பங்குச் சந்தையின் கருத்து 17 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது. 1602 ஆம் ஆண்டில் டச்சு கிழக்கிந்திய நிறுவனத்தால் நிறுவப்பட்ட ஆம்ஸ்டர்டாம் பங்குச் சந்தை, உலகின் முதல் அதிகாரப்பூர்வ பங்குச் சந்தையாகக் கருதப்படுகிறது. இந்த பரிமாற்றம் முதலீட்டாளர்கள் நிறுவன பங்குகளை வாங்கவும் விற்கவும் அனுமதித்தது, வர்த்தக பத்திரங்களுக்கான முறைப்படுத்தப்பட்ட அமைப்பை உருவாக்கியது. காலப்போக்கில், இந்த யோசனை ஐரோப்பா முழுவதும் பரவியது மற்றும் இறுதியில் உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியது, இது பல பங்குச் சந்தைகளை நிறுவ வழிவகுத்தது.

### பங்குச் சந்தையின் சரியான பொருள்

பங்குச் சந்தை என்பது பங்குகள், பத்திரங்கள் மற்றும் வழித்தோன்றல்கள் போன்ற பத்திரங்கள் வாங்கப்பட்டு விற்கப்படும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாகும். நிறுவனங்கள் தங்கள் பங்குகளை பட்டியலிடவும், முதலீட்டாளர்கள் அந்த பங்குகளை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வர்த்தகம் செய்யவும் இது ஒரு தளத்தை வழங்குகிறது. பங்குச் சந்தைகள் பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மை, பணப்புழக்கம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்து, நிதிச் சந்தையில் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களை எளிதாகப் பங்கேற்கச் செய்கிறது.

### பங்குச் சந்தைகளின் வகைகள்

முதன்மை சந்தைகள்

இரண்டாம் நிலை சந்தைகள்

ஓவர்–தி–கவுண்டர் (OTC) சந்தைகள்

எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன் நெட்வொர்க்குகள் (ECNs)

பல வகையான பங்குச் சந்தைகள் உள்ளன, ஒவ்வொன்றும் வெவ்வேறு நோக்கங்களுக்கும் சந்தைகளுக்கும் சேவை செய்கின்றன:

**1. முதன்மை சந்தைகள் :**

இங்குதான் நிறுவனங்கள் முதல் முறையாக புதிய பத்திரங்களை வெளியிடுகின்றன, பெரும்பாலும் ஆரம்ப பொது வழங்கல்கள் (ஐபிஓக்கள்) மூலம். திரட்டப்பட்ட மூலதனம் நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்தவும் வளரவும் உதவுகிறது.

**2. இரண்டாம் நிலை சந்தைகள் :**

முதன்மை சந்தையில் பத்திரங்கள் வழங்கப்பட்டவுடன், அவை இரண்டாம் நிலை சந்தையில் முதலீட்டாளர்களிடையே வர்த்தகம் செய்யப்படுகின்றன. பெரும்பாலான மக்கள் இதை பங்குச் சந்தையாகக் கருதுகின்றனர், அங்கு இருக்கும் பங்குகள் வாங்கப்பட்டு விற்கப்படுகின்றன.

**3. ஓவர்-தி-கவுண்டர் (OTC) சந்தைகள் :**

முறையான பரிமாற்றங்களில் பட்டியலிடப்படாத பத்திரங்கள் நேரடியாக கட்சிகளுக்கு இடையே வர்த்தகம் செய்யப்படும் இந்த பரவலாக்கப்பட்ட சந்தைகள். நுவீளீ சந்தைகள் பொதுவாக குறைவான கடுமையான ஒழுங்குமுறை தேவைகள் கொண்ட சிறிய நிறுவனங்களை உள்ளடக்கியது.

**4. எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன் நெட்வொர்க்குகள் (ECNs) :**

இந்த தானியங்கு அமைப்புகள் பத்திரங்களுக்கான வாங்குதல் மற்றும் விற்பனை ஆர்டர்களைப் பொருத்து, வேகமான மற்றும் திறமையான வர்த்தக தளத்தை வழங்குகிறது. சிளீஹிகள் பாரம்பரிய பங்குச் சந்தைகளில் இருந்து சுயாதீனமாக இயங்குகின்றன.

### பங்குச் சந்தைகள் எவ்வாறு செயல்படுகின்றன

பங்குச் சந்தைகள் வாங்குபவர்கள், விற்பவர்கள், தரகர்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளின் நெட்வொர்க் மூலம் செயல்படுகின்றன. அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதற்கான எளிமையான கண்ணோட்டம் இங்கே:

**1. பட்டியல் :**

நிறுவனங்கள் தங்கள் பங்குகளை பங்குச் சந்தையில் பட்டியலிட விண்ணப்பிக்கின்றன. அங்கீகரிக்கப்பட்டதும், அவர்கள் தங்கள் பங்குகளை ஐபிஓ மூலம் பொதுமக்களுக்கு வழங்க முடியும்.

**2.வர்த்தகம் :**

முதலீட்டாளர்கள் தரகர்கள் மூலம் பங்குகளை வாங்கவும் விற்கவும் ஆர்டர் செய்கிறார்கள். இந்த ஆர்டர்களை பரிமாற்ற தளத்தில் அல்லது மின்னணு முறையில் செயல்படுத்தலாம்.

**3.பொருந்தும் ஆர்டர்கள் :**

பரிமாற்றம் விலை கண்டுபிடிப்பு எனப்படும் செயல்முறையைப் பயன்படுத்தி ஆர்டர்களை வாங்கவும் விற்கவும் பொருந்துகிறது. பரிவர்த்தனைகள் சிறந்த விலையில் நடைபெறுவதை இது உறுதி செய்கிறது.

**4.தீர்வு :**

ஒரு வர்த்தகம் செயல்படுத்தப்பட்ட பிறகு, வாங்குபவர் பங்குகளைப் பெறுவதையும், விற்பவர் கட்டணத்தைப் பெறுவதையும் பரிமாற்றம் உறுதி செய்கிறது. இந்த செயல்முறை தீர்வு என்று அழைக்கப்படுகிறது மற்றும் பொதுவாக சில நாட்களுக்குள் நிகழ்கிறது.

**5.ஒழுங்குமுறை :**

நியாயமான வர்த்தக நடைமுறைகளை உறுதிப்படுத்தவும், முதலீட்டாளர்களைப் பாதுகாக்கவும், சந்தை ஒருமைப்பாட்டைப் பேணவும் பங்குச் சந்தைகள் பெரிதும் கட்டுப்படுத்தப்படுகின்றன. அனைத்து பங்கேற்பாளர்களும் பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் தரநிலைகளை ஒழுங்குமுறை அமைப்புகள் அமைக்கின்றன.

சுருக்கமாக, பங்குச் சந்தை என்பது நிதி உலகில் ஒரு இன்றியமையாத நிறுவனமாகும், இது மூலதனத்தின் ஓட்டத்தை எளிதாக்குகிறது மற்றும் முதலீட்டாளர்களுக்கு அவர்களின் செல்வத்தை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. அதன் தோற்றம், செயல்பாடுகள் மற்றும் வகைகளைப் புரிந்துகொள்வது தனிநபர்கள் மேலும் தகவலறிந்த முதலீட்டு முடிவுகளை எடுக்கவும், உலகப் பொருளாதாரத்தில் இந்த முக்கியமான சந்தையின் பங்கைப் பாராட்டவும் உதவும்.

பங்குச் சந்தைகளின் செயல்பாடுகள் அல்லது முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வதில் ஆர்வமுள்ளவர்களுக்கு, சந்தையின் சிக்கல்கள் மூலம் உங்களுக்கு வழிகாட்ட ஏராளமான வளங்கள் மற்றும் நிதி நிபுணர்கள் உள்ளனர்.

# உங்கள் தொடக்க வணிகத்திற்கான போட்டிப் பகுப்பாய்வைச் செய்வதற்கான 6 படிகள்

**சந்தையில் ஒரு முக்கிய இடத்தைப் பெற விரும்புகிறீர்களா?**

உங்கள் தொடக்க வணிகத்திற்கான போட்டிப் பகுப்பாய்வை எவ்வாறு நடத்துவது என்பது இங்கே.

ஒரு தொடக்கமாக இருப்பதால், போட்டி விதிவிலக்காக அதிகமாக இருக்கும் வணிக உலகில் முத்திரை பதிப்பது கடினம். இருப்பினும், ஒரு போட்டிப் பகுப்பாய்வை நடத்துவது உங்கள் போட்டியின் உத்திகள், பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் கண்டு அதன் அளவை அதிகரிக்க உதவுகிறது.

ஒரு பகுப்பாய்வை நடத்துவது உங்கள் போட்டியாளர்களைப் பற்றிய ஒரு யோசனையை உங்களுக்கு வழங்குகிறது மற்றும் உங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு சந்தை எவ்வளவு ஏற்றுக்கொள்ளத்தக்கது. உங்கள் தொடக்க வணிகத்தை வளர்ப்பதற்கு, உங்கள் வணிகத்திற்கு எது வேலை செய்கிறது அல்லது வேலை செய்யாது என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்.

போட்டி பகுப்பாய்வு உங்கள் போட்டியாளர்களின் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளவும், உங்கள் நடைமுறையில் நீங்கள் செயல்படுத்தக்கூடிய போக்குகளைக் கண்டறியவும் உதவும். நீங்கள் ஒரு தொழில் முறை வழிகாட்டியை விரும்பினால், உங்கள் தொடக்கத்திற்கான வணிக பயிற்சியாளரையும்நீங்கள் நியமிக்கலாம் .

ஆனால் ஒரு புதிய வணிகமாக, உங்கள் தொடக்கச் செயல்முறையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதால், போட்டிப் பகுப்பாய்வை எவ்வாறு நடத்துவது என்பதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு போட்டி பகுப்பாய்வு செய்வது எப்படி என்பதை அறிய விரும்புகிறீர்களா? அதை வெற்றிகரமாக செய்ய ஆறு படிகள்:

**படி 1- உங்கள் போட்டியாளர்களை அடையாளம் காணவும்**

முதல் மற்றும் மிக முக்கியமான படி உங்கள் போட்டியாளர்களைக் கண்டுபிடிப்பதாகும். இரண்டு வகையான போட்டியாளர்கள் உள்ளனர் – நேரடி மற்றும் மறைமுக.

**நேரடி போட்டியாளர்:** உங்கள் வணிகத்தின் அதே வாடிக்கையாளர் தளத்திற்கு ஒத்த தயாரிப்புகள் அல்லது சேவைகளை விற்பனை செய்யும் பிராண்ட் உங்கள் நேரடி போட்டியாளர்.

**மறைமுகப் போட்டியாளர்:** உங்கள் மறைமுகப் போட்டியாளர் என்பது ஒரே மாதிரியான தயாரிப்பை விற்கும் ஒரு பிராண்ட் ஆனால் வேறு வாடிக்கையாளர் தளத்திற்கு அல்லது இதே போன்ற வாடிக்கையாளர் தளத்திற்கு மற்ற பொருட்களை விற்கும்.

தொழில்முனைவோருக்கான சிறந்த வணிகப் பயிற்சியாளருடன் நீங்கள் நெருக்கமாகப் பணிபுரிந்தால் , அவர்கள் உங்கள் போட்டியாளர்களின் பட்டியலைக் குறைக்க உதவுவார்கள்.

இந்த வணிகங்களைக் கண்டறிய, நீங்கள் இணையத் தேடலைச் செய்யலாம் அல்லது இணையத்தில் கிடைக்கும் குறிப்பிட்ட கருவிகளைப் பயன்படுத்தலாம். நீங்கள் யாரை எதிர்க்கிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தவரை நேரடி மற்றும் மறைமுக போட்டியாளர்களைக் கண்டறியவும்.

**படி 2- உங்கள் போட்டியாளர்களின் ஆன்லைன் இருப்பை பகுப்பாய்வு செய்யுங்கள்**

இன்று எல்லாமே டிஜிட்டல் மயம்! உணவு முதல் உடைகள் வரை, சுகாதாரம் முதல் பயணம் வரை, ஒவ்வொரு பிராண்டும் அதன் ஆன்லைன் இருப்பை உருவாக்க முயற்சிக்கிறது. எனவே, உங்கள் போட்டியாளர்களை நீங்கள் கண்டறிந்ததும், அவர்களின் இணையதளங்கள், சமூக ஊடக கணக்குகள் மற்றும் அவர்கள் பார்வையாளர்களுடன் எவ்வாறு ஈடுபடுகிறார்கள் என்பதை மதிப்பீடு செய்வதன் மூலம் அவர்களின் ஆன்லைன் இருப்பை மதிப்பிடுங்கள்.

முன்னணியில் உள்ள நல்ல டிஜிட்டல் மார்க்கெட்டிங் உத்திகளுடன், சிறந்த பயனர் இடைமுகம், வலுவான வடிவமைப்பு மற்றும் சமூக ஊடகங்களில் உங்கள் வாடிக்கையாளர்களுடன் ஈடுபடுவதற்கான உறுதியான திட்டத்தை வழங்கும் இணையதளம் தனித்து நிற்க ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

**படி 3- நிகழ்நிலை மதிப்புரைகளைச் சரிபார்க்கவும்**

ஒரு நிறுவனம் வழங்கும் வாடிக்கையாளர் அனுபவத்தைப் பற்றிய நுண்ணறிவை வாடிக்கையாளர் கருத்து வழங்க முடியும். எனவே, கூகுள், ஃபேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற தளங்களுக்குச் செல்லவும் அல்லது உங்கள் போட்டியாளர் இருக்கும் மற்ற தளங்களைப் பார்வையிடவும். வாடிக்கையாளரின் கேள்விகளுக்கும் எதிர்மறையான கருத்துகளுக்கும் இது எவ்வாறு பதிலளிக்கிறது என்பதைக் கவனியுங்கள்.

எதிர்மறையான மதிப்பாய்வாக இருந்தாலும் சரி அல்லது நேர்மறையான மதிப்பாய்வாக இருந்தாலும் சரி, ஒரு பிராண்டின் செயல்பாட்டை நீங்கள் புரிந்து கொள்ள முடியும், அங்கு எதிர்மறையான மதிப்பாய்வு இந்த பிராண்டுகள் எங்கு குறைவாக உள்ளது மற்றும் இதே போன்ற சூழ்நிலைகளை நீங்கள் எவ்வாறு தடுக்கலாம் என்பதை அறிய உதவும். உங்கள் போட்டியாளர் சரியாக என்ன செய்கிறார் மற்றும் நீங்கள் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதைக் கண்டறிய நேர்மறையான கருத்து உங்களுக்கு உதவும்.

**படி 4 - உங்கள் போட்டியாளரின் வாடிக்கையாளர்களிடம் பேசுங்கள்**

நீங்கள் ஆன்லைன் மதிப்புரைகளைப் படிக்கும்போது, நீங்கள் யாருடன் பேச விரும்புகிறீர்களோ அவர்களைத் தொடர்பு கொள்ளவும். வாடிக்கையாளர்களுடன் பேசுவது மற்றும் அவர்கள் எங்கு சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது, அவர்களுக்கு ஏன் மோசமான அனுபவம் ஏற்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. அவர்களின் பூர்த்தி செய்யப்படாத வணிகத் தேவைகளை நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்துங்கள். முடிவில், அவர்களின் நேரத்திற்கு நன்றி மற்றும் உங்கள் வணிகத்தின் மூலம் ஒரு தீர்வை வழங்குங்கள். உங்கள் வணிகத்திற்கான தொழில்முறை வழிகாட்டுதலுக்காக ஒரு வணிக பயிற்சியாளரை நியமிக்கவும்.

**படி 5- அவர்களின் பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணவும்**

அனைத்து அத்தியாவசிய தகவல்களையும் நீங்கள் சேகரித்தவுடன், அதை ஒரே இடத்தில் தொகுத்து, ஒரு நீநிநுவீ பகுப்பாய்வு நடத்தவும். உங்கள் சொந்த தொடக்க வணிகத்தை மேம்படுத்தவும் , முன்னேற்றம் தேவைப்படும் பகுதியில் கவனம் செலுத்தவும் இந்தத் தகவலைப் பயன்படுத்தலாம்.

**படி 6- ஆராய்ச்சிக் கருவிகளைப் பயன்படுத்தவும்**

பகுப்பாய்வை நடத்துவது சந்தையில் உங்கள் பிராண்டை நிறுவுவதற்கு முக்கியமானது; இது நம்பமுடியாத கடினமான மற்றும் நேரத்தை எடுத்துக்கொள்ளும். அதிர்ஷ்டவசமாக, ஆன்லைனில் கிடைக்கும் பல்வேறு கருவிகள் செயல்முறையை எளிதாகவும் திறமையாகவும் செய்யலாம். உங்கள் போட்டியாளர்களை அடையாளம் காணவும், அவர்களின் உள்ளடக்கத்தைக் கண்காணிக்கவும் மற்றும் முடிவுகளை பகுப்பாய்வு செய்யவும் அந்தக் கருவிகளைப் பயன்படுத்தலாம்.

உங்கள் தொடக்க வணிகத்திற்கான உத்திகளை உருவாக்க விரும்பினால், மேலே குறிப்பிட்டுள்ள படிகளைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் ஒரு போட்டி பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

# வேகமாக பரவும் எலிக்காய்ச்சல்

மழைக்காலம் தொடங்கிவிட்டால் போதும், ஜலதோஷம், ஃப்ளூ, டைபாய்டு, மலேரியா, டெங்கு, பன்றிக் காய்ச்சல், சிக்குன் குனியா, மஞ்சள் காமாலை, வாந்தி, வயிற்றுப்போக்கு எனப் பல நோய்கள் வரிசைகட்டி வந்து நம்மைத்தொல்லைப்படுத்தும். பெரும்பாலும் இந்த நோய்களைப் பற்றிய விவரங்கள் பலருக்கும் தெரிந்திருக்கும். ஆனால், சில நோய்கள் நமக்கு வருவதும் தெரியாது; போவதும் தெரியாது. அப்படியே நோயின் பெயரைத் தெரிந்தாலும், அந்த நோய் பற்றிய விவரங்கள் புரியாது. எல்லாமே புதிதாகவும் புதுமையாகவும் இருக்கும்.

அப்படிப்பட்ட நோய்களில் ஒன்று ‘எலிக் காய்ச்சல்’. 100 பேருக்கு இது வந்தால் 30 பேருக்கு மரணத்தைக் கொண்டுவரக்கூடிய மோசமான நோய் இது. ஆங்கில மருத்துவத்தில் இதை‘லெப்டோஸ்பைரோசிஸ்’ (ஸிளஸ்ரீமிலிவிஸ்ரீஷ்ஷலிவிஷ்வி) என்று அழைக்கிறார்கள். முன்பு இது கிராமத்து நோயாக இருந்தது. இப்போது இது நகரத்து நோயாக மாறிவிட்டது. என்ன காரணம்? ஏரிகள், குளங்கள், குட்டைகள் என்று இயற்கை தந்த நீராதாரங்கள் அனைத்தும் அடுக்குமாடி கட்டிடங்களாக மாறிவிட்ட காரணத்தால், தண்ணீர்வடிய வழியில்லாமல், தெருக்களெல்லாம் குளங்கள் ஆகிவிட்டன.

கால்வாய் சீரமைப்பும், சாலை பராமரிப்பும் சரியில்லாதகாரணத்தால்மழைநீர், குடிநீர், கழிவுநீர் எல்லாமே கலந்து கொசுக்களும் நோய்க்கிருமிகளும்‘மாநாடு’நடத்த இடம்தந்து விட்டன. இதன் விளைவாக வரக்கூடிய பல நோய்களின் பட்டியலில் எலிக்காய்ச்சலும் இப்போது இடம் பெற்றுவிட்டது. யழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் எலிக்காய்ச்சல் வேகமாக பரவுவதோடு மரணங்களும் ஏற்பட்டிருக்கிறது.

‘லெப்டோஸ்பைரா’ எனும் பாக்டீரியா கிருமிகள் இந்த நோயை உண்டாக்குகின்றன. இவை ஸ்போரோரோகீட்ஸ் எனும் இனத்தைச் சேர்ந்தவை. நுண்ணோக்கியில் பார்த்தால் ஆங்கில எழுத்து ‘எஸ்’ வடிவத்தில் ஒரு தொங்கும் தராசு ஊக்கைப்போல இவை காட்சி தரும். இந்த பாக்டீரியாவில் இரண்டு வகைகள் உள்ளன.

1. லெப்டோஸ்பைரா இன்டிரோகன்ஸ் (Leptospira interrogans).

2. லெப்டோஸ்பைரா பைஃபிளக்சா (Leptospira biflexa). இவற்றில் இரண்டாவது இனம் சாதுவானது.




**யாருக்கு பாதிப்பு வரும்?**

விவசாயிகள் மற்றும் பண்ணை வேலை ஆட்கள்.

ஆடு, மாடுவளர்ப்போர்மற்றும்மேய்ப்போர்.

மீன் பிடிப்போர்.

தோட்டத் தொழிலாளிகள்.

விலங்கினக் காப்பாளர்கள்.

கால்நடைப் பணியாளர்கள்.

பால் பண்ணைகளில் பணிபுரிவோர்.

வளர்ப்புப் பிராணிகளை வளர்ப்போர்.

சாக்கடை மற்றும் கழிவுநீரைச் சுத்தம் செய்வோர்.

ராணுவத்தினர்.

**நோய் பரவும் விதம்**

இந்த நோய்க் கிருமிகள் எலிகள் மற்றும் பெருச்சாளிகள்மூலம்பரவுவதுதான்அதிகம். என்றாலும், ஆடு, மாடு, நாய், பூனை, பன்றி, குதிரை போன்ற பல விலங்குகளிடம் இந்த நோய்க்கிருமிகள் காணப்படுவது உண்டு. இவற்றின் சிறுநீரில் இக்கிருமிகள் வெளியேறுவதுவழக்கம். கிராமப்புறங்களில் ஒரு பழக்கமுண்டு. ஆடு, மாடு, பசு போன்ற விலங்குகளைக் குளிப்பாட்டும் அதே குளம், குட்டை, ஊருணிகளில்தான் ஊர் மக்களும் குளிப்பார்கள். விலங்குகளின் சிறுநீர் குளத்து நீரில் கலந்திருக்கும்.

அவை, அதில் குளிப்பவரின் கண், மூக்கு, வாய் வழியாக நுழைந்து, அங்குள்ள சிலேட்டுமப்படலத்தைத்துளைத்துக்கொண்டு உடலுக்குள்நுழைந்துவிடும். அவர்களுக்கும் நோய் பரவும். அடுத்த வழி இது: பாதங்களில் உள்ள சிறு கீறல் அல்லது சிராய்ப்பு போதும், இக்கிருமிகள் உடலுக்குள் நுழைவதற்கு. விவசாய வேலை செய்யும் கிராம மக்கள் பலருக்கும் சேற்றுப்புண் இருக்க அதிக வாய்ப்புண்டு. இதன் வழியாகவும் எலிக்காய்ச்சல் கிருமிகள் உடலுக்குள் பரவிவிடும்.

நெல் வயல்களில் எலிகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். அப்போது அங்கு வெறுங்காலுடன் வேலை செய்பவர்களுக்கு இக்கிருமிகள்பரவும். மாட்டுத்தொழுவங்களில் சாணி அள்ளும்போது, ஆடு, மாடு மேய்ப்பிடங்களில் வேலை செய்யும்போது காலில் செருப்பில்லாமல் நடந்தால், இக்கிருமிகள் பரவ வாய்ப்புண்டு. நகர்ப்புறங்களில் மழை நீர் அல்லது வெள்ளம் வடியாமல் தெருக்களில் தேங்கும். வீட்டில் வாழும் எலிகள் அந்தத் தண்ணீருக்கு வரும்.

அப்போது எலிகளின் சிறுநீர் அதில் கலந்துவிடும். காலில் தகுந்த பாதுகாப்பில்லாமல் தேங்கிய தண்ணீரிலும் மண் சகதியிலும் மக்கள் நடக்கும்போது, பாதங்கள் வழியாக இந்நோய்க் கிருமிகள் உடலுக்குள் நுழைந்துவிடும். இப்படிப் பல வழிகளில் நம் உடலுக்குள் நுழையும் எலிக்காய்ச்சல் கிருமிகள் 2லிருந்து 25 நாட்களுக்குள் நோயை உண்டாக்கும்.

அறிகுறிகள்

இந்த நோய் ஒரு சாதாரண தடுமக் காய்ச்சல் போலத்தான் ஆரம்பிக்கும். கடுமையான காய்ச்சல், தலைவலி, சில நேரங்களில் குளிர்க் காய்ச்சல், கண்கள் சிவப்பது, தாங்க முடியாத தசைவலி, உடல்வலி, வயிற்றுவலி, குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் தோன்றி ஒரு வாரம் வரை தொல்லை கொடுக்கும். இவற்றில் கண்கள் சிவப்பது ஒரு முக்கியமான அறிகுறி. பலருக்கும் இத்துடன் நோயின் அறிகுறிகள் மறைந்து, நோய் குணமாகிவிடும்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு மட்டும் இந்த நோய் தீவிரமடையும். நோய்க்கிருமிகள் பாதிக்கப்பட்ட நபரின் ரத்தத்தில் பயணம் செய்து, கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல், இதயம், இரைப்பை, மூளை போன்றவற்றுக்குப் பரவி, அந்த உறுப்பு களையும் பாதிக்கும். அப்போது அடுத்த கட்ட அறிகுறிகள் தோன்றும்.

எந்த உறுப்பைக் கிருமிகள் பாதிக்கின் றனவோ அதைப் பொறுத்து அறிகுறிகள் தோன்றும்.

எடுத்துக்காட்டாக, கல்லீரல் பாதிக்கப் பட்டவருக்கு, மேற்சொன்ன அறிகுறிகளுடன் மஞ்சள் காமாலை ஏற்படும். கல்லீரல் வீக்கம் அடையும். சிறுநீரகம் பாதிக்கப்பட்டால், சிறுநீர் பிரிவதில் பிரச்னை உண்டாகும். கால், கை, முகம், வயிறு வீங்கும். மூளை பாதிக்கப்பட்டால் மூளைக் காய்ச்சலுக்கு உரிய எல்லா அறிகுறிகளும் தோன்றும். நுரையீரல் பாதிக்கப்படும்போது நிமோனியா நோய் வந்து, இருமல், இளைப்பு வரும்.

இரைப்பை பாதிக்கப்படும்போது ரத்த வாந்தி வரும். குடல் பாதிக்கப்பட்டால் மலத்தில் ரத்தம் வெளியேறும். இது இதயத்தைத் தாக்கினால் இதயத் தசை அழற்சி நோய்க்குரிய நெஞ்சுவலி, மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் தோன்றும். ‘வியில்ஸ் நோய்’வழக்கத்தில் இந்த நோய் பாதித்தவருக்குக் கல்லீரலும் சிறுநீரகமும் கட்டாயம் பாதிக்கப்படும். இதற்கு ‘வியில்ஸ் நோய்’ (Weil's Disease) என்று ஒருதனிப் பெயரும் உண்டு.


மஞ்சள் காமாலைதான் இதன் முக்கிய அறிகுறியாக இருக்கும். சிலருக்கு ரத்த உறைவுக் கோளாறுகளும் சேர்ந்து கொள்ளும். இந்நோய்க் கிருமிகள் ரத்தத்தில் உள்ள தட்டணுக்களை (Platelets) அழித்துவிடும். இவைதான் ரத்தம் உறைவதற்கு உதவும் முக்கிய அணுக்கள். இவற்றின் எண்ணிக்கை குறையும்போது, பல் ஈறு, மூக்கு, நுரையீரல், வயிறு, சிறுநீர்ப் பாதை, எலும்புமூட்டு ஆகியவற்றில் ரத்தக்கசிவை ஏற்படுத்தும்.

இது ஒரு மோசமான நோய். நோயாளியைப் பெரிதும் படுத்திவிடும். மரணத்தின் வாசலுக்கே அழைத்துச்சென்றுவிடும். சரியான சிகிச்சை கிடைத்தால் மட்டுமே உயிர் பிழைக்க வாய்ப்புண்டு. இல்லையென்றால், உயிரிழப்பு ஏற்படும். இந்த இடத்தில் ஒரு முக்கிய விஷயத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். நம் மக்களுக்கு மஞ்சள் காமாலை என்றதுமே அலோபதியை விட்டுவிட்டு, உள்ளூர் வைத்திய முறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கிவிடுவார்கள்.

கண்ட கண்ட இலைகளைச் சாப்பிடுவது, தலையில் பத்து போடுவது என்று பல கைவைத்தியங்களைச் செய்துவிட்டு, நோய் முற்றிய பிறகு மருத்துவமனைக்குச் சிகிச்சை பெற வருவார்கள். அப்போது சிகிச்சை பலனளிக்காமல் பலரும் உயிரிழக்க நேர்கிறது.

**பரிசோதனை**

‘இணையக அணுக்கள் பரிசோதனை’ (Microscopic Agglutination Test MAT). எலிக் காய்ச்சலை உறுதி செய்ய, இப்போது பெரும்பாலான மருத்துவர்கள் பயன்படுத்துகிற பரிசோதனை இதுதான். எலிக் காய்ச்சல் வந்தவருக்கு இந்தக் கிருமிகளுக்கான எதிர் அணுக்கள் (Antibodies) ரத்தத்தில் உற்பத்தியாகும். இதைக் கண்டுபிடிக்கும் பரிசோதனை இது.




இத்துடன் பொதுவான ரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை, கல்லீரலுக்குரிய பரிசோதனைகள், சிறுநீரகப் பாதிப்பை அறியும் பரிசோதனைகள், ஐஜிஎம் எலிசா பரிசோதனை (IgM ELISA Rapid Test), பிசிஆர் பரிசோதனை (Real time DNA PCR Test), முதுகுத் தண்டுவடநீர்ப் பரிசோதனை ஆகியவை இந்த நோயை உறுதி செய்யவும் இதன் பாதிப்புகளைத் தெரிந்துகொள்ளவும் உதவுகின்றன. இசிஜி, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், சிடி ஸ்கேன் பரிசோதனைகளும் தேவைப்படும்.

**சிகிச்சை**

இந்த நோய்க்கு டாக்சிசைக்ளின், பெனிசிலின், ஆம்பிசிலின், எரித்ரோமைசின் எனப் பல மருந்துகள் உள்ளன. நோயின் ஆரம்பத்திலேயே சிகிச்சைக்கு வந்துவிட்டால் நன்கு குணப்படுத்திவிடலாம். மருத்துவரின் ஆலோசனையின் பேரில் முறைப்படி இந்த மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், கல்லீரல், சிறுநீரகம் போன்றவற்றிலும் பாதிப்பு இருந்தால், உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் தரப்படும். மழைக்காலங்களில் மட்டும் முன்னெச்சரிக்கையாக, டாக்சிசைக்ளின் 200 மி.கி. மாத்திரையை வாரத்துக்கு ஒன்று வீதம் சாப்பிட்டு வந்தால், எலிக் காய்ச்சல் வருவதைத் தடுக்கலாம்.

**தடுப்பது எப்படி?**

வயல் வேலை மற்றும் தோட்ட வேலைகளுக்குச் செல்லும்போது கை உறை அணிவது, காலணி அணிவது போன்ற தகுந்த பாதுகாப்புடன் செல்ல வேண்டும்.

குளம், குட்டை, ஊருணிகளில் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அசுத்த தண்ணீரில் நீச்சல் பழகாதீர்கள்.

வெளியில் செல்லும்போதெல்லாம் காலணி அணிய மறந்துவிடாதீர்கள்.

முக்கியமாக, மழைக்காலங்களில் வெறுங்காலோடு நடக்காதீர்கள்.

மண் சகதியில் வெறுங்காலை வைக்காதீர்கள்.

வீட்டிலும் வயலிலும் எலி மற்றும் பெருச்சாளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

தண்ணீரைக் கொதிக்கவைத்து, ஆற வைத்துக் குடிக்க வேண்டும்.

காய்கறி, பழங்களை நன்கு கழுவிச் சுத்தம் செய்த பிறகே சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும்.

சுய சுத்தம் மிக முக்கியம். குறிப்பாக, கைகளையும் பாதங்களையும் சோப்பு போட்டுக் கழுவி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

கை, கால்களில் சேற்றுப்புண், சிராய்ப்புகள், காயங்கள் இருந்தால் உடனடியாக சிகிச்சை பெற்று குணப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வீட்டில் அழுகிய உணவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி விடுங்கள். இது எலிகளின் நடமாட்டத்தைக் குறைக்கும். முடிந்தவரை உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

# இலங்கையின் வருமானத்தில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு

க.பிரசன்னா


இலங்கையின் வருமானத்தில் சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பன பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது. 2018 ஆம் ஆண்டு இலங்கையின் முக்கிய ஏற்றுமதி மூலங்களாகவிருந்த ஆடை, தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் ஆகியவற்றுக்கு அதிகமாக சுற்றுலாத்துறையின்மூலம்அதிகவருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக நாடு முடக்கப்பட்டமை, அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றினால் இலங்கையின் வருமானம் குறைந்து கடன் தொகை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் இலங்கைக்கு வருமானத்தை அதிகரிக்கும் வகையில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின் அடிப்படையில், 2009 ஆம் ஆண்டு இலங்கையில் நிலவிய உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்தமையை அவதானிக்க முடிகின்றது. 2009 ஆம் ஆண்டு சுற்றுலாத்துறை மூலம் இலங்கை 349.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக பெற்றுக்கொண்டிருந்த நிலையில் அடுத்த ஐந்து ஆண்டுகளை கடந்து 2014 ஆம் ஆண்டு 2431.1 மில்லியன் அ.டொலர்களை பதிவு செய்திருந்தது. இது 5.95 சதவீத அதிகரிப்பாகும்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக இலங்கை சுற்றுலாத்துறையின் மூலம் பெற்றுக்கொண்ட வருமானம் அதிகரித்துச் சென்றிருந்தது. அதிகபட்சமாக 2018 ஆம் ஆண்டு 4380.6 மில்லியன் அ.டொலர்கள் வருமானத்தை இலங்கை பெற்றுக் கொண்டிருந்தது.

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் நிலைமைகள், கொவிட் தொற்று நெருக்கடியின் காரணமாக நாடு முடக்கப்பட்டமை மற்றும் அரசியல், பொருளாதார நெருக்கடி நிலைமைகள் என்பன சுற்றுலாத்துறை வீழ்ச்சியில் பாரிய தாக்கத்தை செலுத்தியிருந்தன.

2019 ஆம் ஆண்டுக்கு முன்னரான ஆறு வருட காலப்பகுதியில் சுற்றுலாத்துறை மூலம் இலங்கை 20,842 மில்லியன் அ.டொலர்களை வருமானமாக பெற்றிருந்தது. இவை 2019 ஆண்டுக்குப் பின்னர் 5081 மில்லியன் அ.டொலராக வீழ்ச்சியடைந்திருந்தது. 2009 ஆம் ஆண்டு நிலவிய உள்நாட்டு யுத்தத்துக்குப் பின்னர் 2021 ஆம் ஆண்டு மிகக் குறைந்த வருமானத்தை சுற்றுலாத்துறையின் மூலம் இலங்கை பதிவு செய்துள்ளது.




2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய வருவாய்களில் மூன்றாவது மிகப்பெரும் மூலமாக சுற்றுலாத்துறை காணப்பட்டதுடன் இக்காலப்பகுதியில் மொத்தமாக வெளிநாட்டு நாணய வருவாய்களில் சுமார் 14 சதவீதத்துக்கு பங்களித்திருந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலாத்துறையின் மூலம் உயரிய வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் இலங்கை சுற்றுலாத்துறை வருமானம் 4381 மில்லியன் அ.டொலர்கள் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிலையில் நாட்டின் ஏனைய ஏற்றுமதி மூலங்களின் மூலம் குறைந்தளவான வருமானமே பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆடைகள் ஏற்றுமதி மூலம் 2459 மில்லியன் அ.டொலர்களும் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் மூலம் 2303 மில்லியன் அ.டொலர்களும் வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தநிலையில், 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை இலங்கைக்கு சுற்றுலாத்துறையின் மூலம் எவ்வித வருமானமும் பெற்றுக்கொள்ளப்படவில்லையென இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிக்கின்றது. கொவிட் தொற்று பரவல் மற்றும் நாடு முடக்கப்பட்டமை இவற்றுக்கு பிரதான காரணங்களாக இருந்தன. எனினும் அந்தாண்டில் டிசம்பர் மாதத்துக்குப் பின்னர் சுற்றுலாத்துறை வருமானத்தில் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.


2022 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் இலங்கையின் வருமானத்தில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு 1136 மில்லியன் அ.டொலரிலிருந்து 2023 ஆம் ஆண்டு 2068 மில்லியனாக அதிகரித்திருந்தது.

தற்போது இலங்கையின் சுற்றுலாத் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் என்பவற்றின் காரணமாக சமகாலத்தில் அதன் அபிவிருத்தியில் ஏற்றம் கண்டுள்ளது. எதிர்காலத்தில் இந்நிலைமையில் மேலும் மாற்றங்கள் ஏற்பட்டு இலங்கையின் வெளிநாட்டு நாணய வருமானத்தில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பு அதிகரிக்குமென எதிர்பார்க்கலாம்.

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

# பரம்பரைக்குக் கடத்துவது

கூலி கொடுப்பதற்கு கோடிபணம்
வேண்டுமென்றும்
கூட்டிப் பெருக்குதற்கு குனிந்தெழும்ப
வேண்டுமென்றும்
வேலிக் கதியாலை வேரோடு
பெயர்த்துவிட்டு
வேலிக்குத் தகரமிட்டோம்
வெய்யிலுக்கு வாய்ப்பளித்தோம்
மதிலே மதிப்பென்று மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டோம்
பள்ளிக்குச் சென்றுவந்த பருவப்
பொழுதுகளில்
அள்ளும் அடிச்சூட்டை அருகுவேலிக் கதியால்கள்
மெள்ளக் குறைத்ததனை மேதினியில் மறந்துவிட்டோம்

வேலி கழற்றி, வெள்ளாமை வயலுக்குள்
வெட்டிப் புதைத்ததனால் விறுவிறெனப் பயிர்வளரல்
கண்டு களித்த கடைசிப் பரம்பரைநாம்

தழைச்சத்தும் மணிச்சத்தும் இலைகுழையில்
இருக்குதென்ற
தாற்பரியம் மறந்துவிட்டோம்
அவரைப் பயிரினங்கள் அருகினிலே இருப்பதனால்
உயர இருக்கும் நைதரசன் கீழிறங்கும்.
எவரைப் பார்த்துத்தான் எட்டி உதைத்தோமோ
இப்போ துழல்கின்றோம்
'பொட்டாஸ்' உரம்உமியைப் போட்டெரித்தால்
கிடைத்துவிடும்
அதற்காக
கட்டாகக் காசை கரியாக்கப் பழகிவிட்டு
மட்டில்லா விலைக்கு மலையேறிப் பெற்றுவந்தோம்

இப்படித்தான்.....
கூலி கொடுப்பதற்கு கோடிபணம்
வேண்டுமென்றும்
கூட்டிப் பெருக்குதற்கு குனிந்தெழும்ப
வேண்டுமென்றும்
வேலிக் கதியாலை வேரோடு
பெயர்த்தெறிந்து
வேலியிலே ஓர்கிளையில்
கூவிக் கொண்டிருந்த குயிலைத் துரத்திவிட்டு
குயில்ப்பாட்டின் மகத்துவத்தைக் குறிப்பெடுத்துக்
குறிப்பெடுத்து
சூப்பைலில் அடுக்கிவைத்துப் பரம்பரைக்குக்
கடத்துகிறோம்.

**கவிஞர் வ. வடிவழகையன்**






இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2024இல் வெளியிடப்பெற்றது.